KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
HOMELIFE
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

மலர்:- 33, 10 April 2026 இதழ்:- 14

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## அரசியல் தீர்வுத் திட்டத்தை வடிவமைக்க சிறப்பு வரைபுக்குழு!



தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை ஒருங்கிணைப்பில், இலங்கைத் தமிழ் மக்க ளின் அரசியல் தீர்வுக்கான புதிய அரசிய லமைப்பின் அடிப்படை அம்சங்கள் குறித்து தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும், அவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான இரண்டாவது முக்கிய கூட்டம் கொழும்பில் நடை பெற்றது. இந்த மாநாட்டில், தமிழ் மக்களின் அரசியல் தீர்வுகளுக்கான புதிய அரசியல மைப்பின் அடிப்படை அம்சங்கள் குறித்து கட்சிகள் இடையே ஏகமனதாக இணக்கப்பாடு எட்டப்பட்ட தாக தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் ஒருங்கிணைப்பாளர்கள் (3ம் பக்கம் பார்க்க)

## பல ஆண்டு காலம் மருத்துவர்களால் கண்டு பிடிக்க முடியாத நோயைக் கண்டறிந்த ChatGPT

# லெபனானையும் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இணைக்குமாறு கனடா அழுத்தம்!



அமெரிக்காவின் டிரம்ப் நிர்வாகத்திற் கும் ஈரானுக்கும் இடையே எட்டப் பட்டுள்ள தற்காலிகப் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் லெபனானையும் ஒரு அங்கமாகச் சேர்க்க வேண்டும் என்று கனடா அரசு தீவிரமாக வலியுறுத்தி வருகிறது. இந்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் மதிக்க வேண்டும் எனவும், லெபனான் மீதான தாக்குதல்களை நிறுத்த வேண்டும் எனவும் பிரதமர் (24ம்பக்கம் பார்க்க)

## வெடுக்குநாறிமலை பௌத்த மதத்திற்குரியது! பௌத்த சாசன அமைச்சர் தெரிவிப்பு

வெடுக்கு நாறிமலையில் உள்ள மத அடையாளங்கள் பௌத்த மதத்திற்கு உரியவை. அது அமைந்துள்ள பகுதியை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக மாற்றுவ தற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவி தெரிவித்துள்ளார். பாராளுமன்றில் 09 ஏப்ரல் 2026 இடம் பெற்ற விவாதத்தில் உரை யாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில் (7ம் பக்கம் பார்க்க)



## ஜே.வி.பி ஒரு கட்சிஆட்சியை நோக்கி நகர்கின்றதா?

ஜே.பி.வி ஒரு கட்சி ஆட்சியை நோக்கி நகர்கின்றது - இப்படியானதொரு பார்வை சிலரிடம் உண்டு. இவ்வாறான வாதம் தென்னிலங்கை யிலிருந்து வருவதை விடவும் வடக்கிலிருந்து தான் வருகின்றது. இலங்கை தமிழரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் அண்மையில் இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன் வைத்திருக்கின்றார். அவர் இந்தக் குற்றச்சாட்டை புதுடில்லியில் வைத்து முன் வைத்திருப்பது (12ம்பக்கம்)

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

RE/MAX ACE REALTY INC., BROKERAGE — EXPERIENCE THE DIFFERENCE — INDEPENDENTLY OWNED & OPERATED — we are ace



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

23 Years Real Estate Experience


**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com

150 Consumers Rd #109, North York, ON M2J 1P9, Canada
**Bus: 416-293-4500**




REALTOR | MLS


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Adelaide Ave E / Simcoe St

**Oshawa** — **$699,000**
3+2 Beds • 2 Baths • 9 Rooms
high-demand rental area


### Kingston Rd & Sheppard Ave E


**Scarborough** — **$710,000**
3+2 Beds • 3 Baths • 8 Rooms
open living and dining area

### Islington Ave / Steeles Ave W

**Toronto** — **$749,000**
4 Beds • 2 Baths • 8 Rooms
Corner Condo Townhouse

### Neilson Road & Sheppard

**Scarborough** — **$839,000**
4+1 Beds • 3 Baths • 7+3 Rooms
Location, location, location!

### Danforth and Dawes

**Toronto** — **$839,999**
2+1 Beds • 2 Baths • 7 Rooms
Corner suite, unobstructed views

### Williamson & Westney

**Ajax** — **$849,000**
3 Beds • 3 Baths • 7 Rooms
Detached 2-storey home


### Rogers and Dufferin St

**Toronto** — **$849,999**
3 Beds • 2 Baths • 6+1 Rooms
fully renovated from top to bottom


### Markham Rd & Lawrence Ave


**Scarborough** — **$999,000**
3+3 Beds • 4 Baths • 6+5 Rooms
fully renovated bungalow

### Harmony Road / Conlin Road

**Oshawa** — **$999,000**
4 Beds • 3 Baths • 9 Rooms
Upgraded from top to bottom

### Cameo St / Burkolder Dr

**Pickering** — **$999,900**
3 Beds • 3 Baths • 7 Rooms
Newly built detached home

### Hwy10 / Hwy 89

**Shelburne** — **$999,900**
5 Beds • 5 Baths • 10 Rooms
Luxurious savile row model home

### Markham/Steeles

**Markham** — **$999,999**
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Fin.basement with sep.entrance

### Markham Rd/ Lawrence Ave E
FOR LEASE

**Scarborough** — **$2,700**
3 Beds • 1 Baths • 6 Rooms
Recently refreshed with new paint

### Markham Rd & Sheppard Ave
FOR LEASE

**Scarborough** — **$2,250**
1+1 Beds • 1 Bath • 5 Rooms
Open concept w/ natural sunlight

### Simcoe St/ Windfields Farm Dr
FOR LEASE

**Oshawa** — **$1,500**
1 Bed • 1 Bath • 3 Rooms
Basement with sep entrance

### Markham & Denison
FOR LEASE

**Markham** — **$1,450**
1 Bed • 1 Bath • 4 Rooms
Basement with sep entrance

EELANADU
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும், கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# அரசியல் தீர்வுத் திட்டத்தை வடிவமைக்க சிறப்பு வரைபுக்குழு!

தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை ஒருங் கிணைப்பில், இலங்கைத் தமிழ் மக்க ளின் அரசியல் தீர்வுக்கான புதிய அரசிய லமைப்பின் அடிப்படை அம்சங்கள் குறித்து தமிழ்த் தேசிய அரசியல் கட்சி களுக்கும், அவற்றை பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான இரண்டாவது முக்கிய கூட்டம் கொழும்பில் நடைபெற்றது.



இந்த மாநாட்டில், தமிழ் மக்களின் அரசியல் தீர்வுகளுக்கான புதிய அரசிய மைப்பின் அடிப்படை அம்சங்கள் குறித்து கட்சிகள் இடையே ஏகமனதாக இணக்கப்பாடு எட்டப்பட்டதாக தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் ஒருங்கி ணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த அடிப்படை அம்சங்களை பொதுநோக்காகக் கொண்டு, தமிழ் மக்களின் இனப்பிரச்சனைக்கு தீர்வளிக் கும் வகையில் ஒருங்கிணைந்த தீர்வுத் திட்டம் ஒன்றை உருவாக்கவும் உடன் பாடு காணப்பட்டுள்ளது.

இதற்காக விரிவான அரசியல் தீர்வுத் திட்டத்தை வடிவமைக்கும் நோக்கில் ஒரு சிறப்பு வரைபுக்குழு (Drafting Committee) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் தமிழ்த் தேசிய கட்சி களின் பிரதிநிதிகளுடன், நிபுணர் குழு வும் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சியின் ஒருங்கிணைப்பாளர் களாக சிரேஷ்ட சட்டத்தரணிகளான கா. ரனித்தா ஞானராஜா மற்றும் மரியதாஸ் யூட் டினேஷ் ஆகியோர் செயற்படுவார் கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நிபுணர் குழுவில் க. கனக ஈஸ்வரன், எம். சொர்ணராஜா, என். செல்வக் குமாரன், வி.ரி. தமிழ்மாறன், என். சிவக் குமார், கே. குருபரன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

மேலும், இந்த மாநாட்டில் பங்கேற்ற ஒவ்வொரு தமிழ்த் தேசிய அரசியல் கட்சியும் தங்களது சார்பில் ஒரு உறுப்பினரை இந்த நிபுணர் குழுவில் நியமிக்க ஒப்புதல் வழங்கியுள்ளன.

முன்னதாக பல்வேறு அரசியல் கட்சி களும் அமைப்புகளும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் மற்றும் முன்மொழிவுகளை சமர்ப்பித்திருந் தாலும், அனைத்து தமிழ்த் தேசிய கட்சி களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒருங்கி ணைந்த வரைபை உருவாக்குவது முக்கிய தேவையாகக் கருதப்பட்டுள் ளது. இந்நிலையில் எதிர்காலத்தில் புதிய அரசியலமைப்பு தொடர்பாக இலங்கை அரசாங்கம் கலந்துரையாடல்களை முன்னெடுத்தால், இந்த ஒருங்கிணைந்த அடிப்படை வரைபே தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசிய கட்சிகளின் கூட்டு நிலைப்பாடாக முன் வைக்கப்படும் எனவும் இந்த மாநாட்டில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பிரான்ஸில் ஈழத்தமிழ் தாயும் மகளும் சடலங்களாக மீட்பு!



பிரான்சின் சென் –சென் –டெனிஸ் (Seine-Saint-Denis) மாகாணத்திற் குட்பட்ட பான்டின் (Pantin) நகரில், ஈழத்தமிழ்த் தாயும் அவரது மகளும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். பான்டின் நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் வசித்து வந்த இவர்கள், நீண்ட நாட்களாக வீட்டை விட்டு வெளியே வராததால் அக்கம் பக்கத்தினருக்கு சந்தேகம் ஏற்பட்டுள் ளது.

இது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத் திற்கு (18ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# தமிழ் இந்துக்களுக்கு ஒரு நீதி! சிங்கள பௌத்தர்களுக்கு வேறு நீதி! தொல்பொருள் அமைச்சரிடம் ஆதாரத்துடன் சாணக்கியன் கேள்வி!

ஒரே நாடு ஒரே சட்டம் என்று கூறும் இந்த அரசில், தமிழ் இந்துக்களுக்கு ஒரு நீதியும், பௌத்தர்களுக்கு மற்றொரு நீதியும் வழங்கப்படுவது எந்த விதத்தில் நியாயம் என பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் 08 ஏப்ரல் 2026 புதன்கிழமை பாராளுமன்றத்தில் தொல்பொருள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். சாணக்கியன் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நான் எழுப்புகின்ற இந்த விடயம் வெறும் ஒரு அரசியல் குற்றச்சாட்டு அல்ல. இது வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் வாழ்வியலும், அவர்களின் மத உரிமைகளும் தொடர்புடைய மிகக் கடுமையான பிரச்சினையாகும்.

இலங்கையில் தொல்பொருள் திணைக்களமும் சில அரச நிறுவனங்களும் நடைமுறையில் மத ரீதியான பாரபட்சத்துடன் செயல்படுகின்றன என்ற குற்றச்சாட்டை நான் மிகுந்த பொறுப்புடன் இச்சபையில் முன்வைக்கின்றேன்.

திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த ஆலயத்திற்குச் சொந்தமான 18 ஏக்கர் நிலத்தில் ஒரு வாழை மரத்தைக் கூட நட அனுமதி இல்லை. ஆனால் அதே ஆலயப் பகுதியில், பெரும்பான்மையினருக்குச் சொந்தமான 58 வர்த்தக நிலையங்கள் தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியுடன் சட்டவிரோதமாக இயங்கி வருகின்றன. இதை எந்த அடிப்படையில் நியாயப்படுத்தப் போகிறீர்கள்?

மட்டக்களப்பு தாந்தாமலை முருகன் ஆலயத்தில் நிலைமை இன்னும் மோசமாக உள்ளது. தீக்கிரையான மின்சார மீட்டர் பெட்டியை மாற்றுவதற்கே அனுமதி மறுக்கப்படுகிறது. ஆலயக் கட்டடத்தை சேதப்படுத்தும் வகையில் வளர்ந்துள்ள அரச மரத்தை வெட்ட அனுமதி இல்லை. ஆனால் அதே பகுதியில் புதிய விகாரை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது பாதுகாப்பு கொள்கையா? அல்லது திட்டமிட்ட தடை செய்யும் நடவடிக்கையா?

திருகோணமலை குச்சவெளி பகுதியைப் பாருங்கள். 24 கிராம சேவகர் பிரிவு களில் 500க்கும் குறைவான சிங்கள மக்கள் மட்டுமே வாழ்கின்றனர். ஆனால் அங்கு 38 புதிய விகாரைகள் அமைக்கப்படுகின்றன. அதாவது தலா 10 பேருக்கு ஒரு விகாரை என்ற அளவில் இந்த நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன.இது இயல்பான தேவையா அல்லது திட்டமிட்ட மாற்றமா?



முல்லைத்தீவில் குருந்தூர் மலைப் பகுதியில் ஆலயத்திற்குச் சொந்தமான 78 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள குளத்தில் தமிழர்கள் மீன் பிடிக்க முடியாது, ஆனால் சிங்களவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அங்கே தேங்காய் உடைத்து வழிபடுவதற்கே கூட அனுமதி இல்லை. இது எந்த வகையான சம உரிமை?

வவுனியாவில் உள்ள வெடுக்குநாறி மலையில் வழிபாடு செய்ய அனுமதி மறுக்கப்படுகிறது. அதே நேரத்தில் யாழ்ப்பாணம் தையிட்டியில் தனியார் காணியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அரசு சட்ட பூர்வமாக்க முயல்கிறது. இந்த இரட்டை நிலைப்பாடு ஏன்?

மேலும் பலாலி மயிலிட்டி பகுதியில் அமைந்திருந்த ‘காணிக்கை மாதா’ தேவாலயம் இராணுவத்தினரால் இடிக்கப்பட்டுள்ளது. இது மத சுதந்திரத்திற்கு எதிரான மிகக் கடுமையான செயல் அல்லவா? மட்டக்களப்பு மாவட்டத்தில் தொல் பொருள் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகளுடன் கூட கலந்துரையாறுத்து தன்னிச்சையாகச் செயற்படுகின்றனர்.

அனைத்து அரச ஆவணங்களும் சிங்கள மொழியிலேயே அனுப்பப்படுகின்றன. தமிழ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டு, தமிழ் தெரியாத அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர். இது நிர்வாக நீதி தானா?

மாண்புமிகு அமைச்சரே, நான் நேரடியாக கேட்கிறேன்: இந்த நடவடிக்கைகள் எந்த சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன? உள்ளூர் மக்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டதா? ஏன் தமிழ் இந்துக்களுக்கு ஒரு சட்டம், பௌத்தர்களுக்கு இன்னொரு சட்டம்?

இது வெறும் நிலம் பற்றிய பிரச்சினை அல்ல இது ஒரு மக்களின் மத உரிமை, அடையாளம், மரபு பற்றிய பிரச்சினை. எனவே, கோவில்களுக்கு சொந்தமான நிலங்களை மீண்டும் வழங்குவீர்களா? வழிபாட்டிற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்குவீர்களா? அனைத்து மதங்களுக்கும் சம உரிமையை உறுதிப்படுத்துவீர்களா? சட்டவிரோத கட்டிடங்களுக்கு வழங்கப் பட்ட அனுமதிகளை மறுபரிசீலனை செய்வீர்களா?

இன மற்றும் மத அடிப்படையிலான அமைப்பு மாற்றங்களை உடனடியாக நிறுத்துவீர்களா?

ஒரே நாடு ஒரே சட்டம் என்று கூறும் இந்த அரசில், தமிழ் இந்துக்களுக்கு ஒரு நீதியும், பௌத்தர்களுக்கு மற்றொரு நீதியும் வழங்கப்படுவது எந்த விதத்தில் நியாயம்? இந்த உயரிய சபைக்கும், எமது மக்களுக்கும் தெளிவான பதில் தேவை என்றார்.




# பிரான்ஸில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில்18 வயது தமிழ் மாணவன் வெற்றி பெற்றுள்ளார்

பிரான்சில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த 18 வயது மாணவர் பிலால் லுக்மான் நகராட்சி உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் பிரான்சின் மிக இளம் வயது மக்கள் பிரதிநிதிகளில் ஒருவராக அவர் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

பாரிஸின் புறநகர் பகுதியான கயன் கோர்ட் நகரில் 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிறந்த பிலால், இலங்கையின் மன்னார் மற்றும் யாழ்ப் பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். கடந்த மார்ச் 15 மற்றும் 22 ஆம் திகதிகளில் நடைபெற்ற தேர்தலில், தற்போதைய மேயரின் அணியில் போட்டியிட்டு



அவர் இந்த வெற்றியைப் பதிவு செய்துள்ளார்.

பிலால் லுக்மான் தற்போது பிரான்சின் புகழ்பெற்ற 'பாரிஸ் – பாந்தியன் – அசாஸ்' பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு சட்டத்துறை மாணவராகப் பயின்று வருகிறார். தனது 18 ஆவது வயதிலேயே வாக்காளராகவும், வேட்பாளராகவும் ஒரே தேர்தலில் பங்கேற்று வெற்றி பெற்றுள்ளார்.

தனது 15 மற்றும் 16 வயதிலேயே பிரான்சின் நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் கல்வி அமைச்சர் மற்றும் உள்ளூர் மேயர் ஆகியோரின் அலுவலகங்களில் பயிற்சி பெற்று பொது விவகாரங்களில் அனுபவம் பெற்றவர். மேலும், சிறுவர் நகராட்சி சபையில் பங்கேற்று சமூக சேவைகளிலும் ஈடுபாடு காட்டி வந்துள்ளார்.

தனது வெற்றி குறித்து பிலால் லுக்மான், நாம் எங்கிருந்து வந்தோம் அல்லது எந்தப் பாதையில் வந்தோம் என்பது முக்கியமல்ல. நாம் இணைந்து எதைக் கட்டியெழுப்பப் போகிறோம் என்பதே முக்கியம். அரசியல் என்பது அர்த்தமற்றது என்று நினைப்பதை மக்கள் நிறுத்த வேண்டும்.'

தனது கல்விப் பணிகளுக்கு மத்தியில், புதிய அரசியல் பொறுப்புகளையும் சமநிலைப்படுத்தி, இளைஞர்களை அரசியலில் அதிகளவில் ஈடுபட ஊக்குவிப்பதே தனது நோக்கம் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நயினாதீவு மண்ணின் மைந்தன் புலம் பெயர்ந்த தேசத்தில் உயர்ந்து நிற்கும் இளம் தலைமுறைச் சின்னம் செல்வன் சாரங்கன் (அபி) சிவராஜா அவர்கள் பிரான்சின் Louvres வட்டார அரசியலில் கவுன்சிலராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# பல ஆண்டு காலப் போராட்டம்:- மருத்துவர்களால் கண்டு பிடிக்க முடியாத நோயைக் கண்டறிந்த ChatGPT




பல ஆண்டுகளாக மருத்துவர்களால் தவறாகக் கணிக்கப்பட்ட தனது அரிய வகை நோயை, 'ஊாயவபீவ' செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தின் உதவியுடன் இளம்பெண் ஒருவர் கண்டறிந்துள்ள நெகிழ்ச்சியான சம்பவம் கார்டிஃப் (Cardiff) பகுதியில் நிகழ்ந்துள்ளது.

கார்டிஃப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஃபோப் டெசோரியர் (Phoebe Tesoriere) தனது சிறு வயது முதலே உடல் சமநிலை இழப்பு மற்றும் நடப்பதில் சிரமம் போன்ற பிரச்சினைகளை எதிர் கொண்டு வந்துள்ளார்.

19வயதில் இவருக்கு வலிப்பு ஏற்பட்ட போது, அது வெறும் 'மனப் பதற்றம்' என்று மருத்துவர்களால் கூறப்பட்டது. பின்னர் 2022 – இல் இவருக்கு 'வலிப்பு நோய்' இருப்பதாகத் தவறாகக் கணிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது.

இந்நிலையில் 2025 ஜனவரியில் படிக்கட்டுகளில் இருந்து விழுந்த இவருக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து நடத்தப்பட்ட சோதனைகளும் எந்தத் தெளிவான முடிவையும் வைத்தியசாலைகள் தரவில்லை.

தொடர் வலிப்புகளால் மூன்று நாட்கள் கோமா நிலையில் இருந்த ஃபோப், தனது அறிகுறிகள் அனைத்தையும் 'ChatGPT' செயலியில் பதிவிட்டுள்ளார்.

இதன் போது அந்தத் தொழில் நுட்பம், அவருக்கு 'பரம்பரை ஸ்பாஸ்டிக் பாராபிலீஜியா' (Hereditary Spastic Paraplegia) என்ற அரிய வகை மரபணு நோய் இருக்கலாம் எனப் பரிந்துரைத்தது.

இந்தத் தகவலைத் தனது பொது மருத்துவரிடம் (GP) ஃபோப் வழங்கியுள்ளார். அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட மரபணு சோதனையில் (Genetic Testing), அவருக்கு அந்த அரிய வகை நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள மருத்துவர் ரெபெக்கா டாம்லின்சன், மக்கள் தங்களது உடல்நலக் கவலைகளை ஆராய AI கருவிகளைப் பயன்படுத்தினாலும், இறுதி முடிவுகளை எடுப்பதற்கு முன்னர் கண்டிப்பாக மருத்துவ நிபுணர்களுடன் ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

தற்போது சரியான சிகிச்சையைப் பெற்றுவரும் ஃபோப், பல ஆண்டுகளாகத் தான் எதிர்கொண்ட தனிமைக்கும் குழப்பத்திற்கும் ஒரு விடை கிடைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# யூத அரசை புற்றுநோய் என்று கூறிய பாகிஸ்தானுக்கு இஸ்ரேல் கண்டனம்

மனிதகுலத்தின் சாபம் என இஸ்ரேலைக் குறிப்பிட்ட பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிஃபுக்கு இஸ்ரேல் கண்டனம் தெரிவித்துள்ளதோடு, இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் கிடியான் ஸார் யூத அரசை, புற்றுநோய் என்று கூறுவது, அதன் அழிவுக்கு அழைப்பு விடுப்பதற்கு சமம் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், இஸ்ரேலை அழிக்க வேண்டும் என்ற பாகிஸ்தான் அமைச்சரின் கூற்று மூர்க்கத்தனமானது. இது எந்தவொரு அரசாங்கத்திடமிருந்தும் குறிப்பாக, அமைதிப் பேச்சுவார்த்தைக்காக மத்தியஸ்தம் வகிப்பவர்கள் என்று கூறிக் கொண்டிருக்கும் ஒரு நாட்டின் அரசாங்கம் சொல்லக்கூடிய கூற்று அல்ல என்று இஸ்ரேல் பிரதமரான நெதன்யாகுவின் அலுவலகம் பதிலளித்துள்ளது.

இரு நாடுகளுக்கிடையேயான அமைதிக்கான பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிப்பதாகக் கூறிக்கொண்டிருக்கும் ஒரு அரசாங்கத்திடமிருந்து வரும் இந்த அப்பட்டமான யூத விரோத இரத்த அவதூறு வார்த்தைகளை இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் கடுமையாக சாடுகிறார். இஸ்ரேலை அழிப்பதாக சபதம் செய்யும் பயங்கரவாதிகளிடமிருந்து இஸ்ரேல் தன்னை



தற்காத்துக் கொள்ளும் என்றும் கிடியான் ஸார் கூறியுள்ளார்.

ஈரான் அமெரிக்கா போர்நிறுத்தப் பேச்சுவார்த்தைக்கான நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டு வரும் இந்நாட்களில் கடந்த புதன்கிழமை முதல் லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது. இந்த போர்நிறுத்தத்தில் லெபனானையும் இணைத்துக் கொள்ளுமாறு பாகிஸ்தான் கூற, அதையும் இஸ்ரேல் மறுத்து விட்டது.

இந்நிலையில், இஸ்ரேலின் மூர்க்கத்தனமான தாக்குதலை பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிஃப் கண்டித்ததையடுத்து, அதற்கு பதிலளிக்கும் விதமாக இஸ்ரேல் கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட ஒருபோதும் இடமில்லை - சீனா

மேற்காசிய பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழலால் இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட எந்தச் சூழலிலும் இடமளிக்கப் போவதில்லை என இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

கண்டி, அஸ்கிரிய ஸ்ரீ சந்தானந்த பௌத்த கல்லூரியில் குறைந்த வருமானம் பெறும் 350 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களிடம் பேசியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், மேற்காசிய மோதல்களினால் உலகில் சில நாடுகள் தற்போது எரிபொருள் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றன. ஆனால் இலங்கைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் எந்த நேரத்திலும் வழங்க சீனா தயாராக உள்ளது.

ஒருவேளை நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவானால், இலங்கையில் இயங்கி வரும் சீனாவின் 'சினோபெக்' நிறுவனம் ஊடாக அந்த நிலைமையை வெற்றிகரமாகக் கையாள முடியும். சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவைச் (7ம் பக்கம் பார்க்க)

# நல்லூர் மந்திரிமனை கண் முன்னே அழிந்து போகுது! பார்த்துக் கொண்டிருக்க முடியாது என வேதனைப்படும் சி.வீ.கே.சிவஞானம்



யாழ்ப்பாணத்தின் தொன்மையான வரலாற்று சின்னமான நல்லூர் மந்திரிமனை கண் முன்னே அழிந்து போவதை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது, அதனை புனரமைப்பது தொடர்பாக நல்லூர் மந்திரிமனையின் நம்பிக்கை பொறுப்பாளர்களும் தொல்லியல் திணைக்களமும் இணைந்து இரு வாரங்களுக்குள் ஒரு முடிவுக்கு வர வேண்டும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர் மந்திரிமனை அழியும் அபாயத்தில் உள்ளது. அதன் ஒரு பகுதி கடந்த மழைக்கு இடிந்து விழுந்துள்ளது. அதன் அருகில் வசிப்பவன் என்ற வகையில் எனக்கு அது தொடர்பாக அக்கறை உள்ளது. கடந்த காலத்திலிருந்து பல முயற்சிகள் எடுத்தும் எதுவும் சாத்தியப்படவில்லை. அது ஒரு நம்பிக்கை பொறுப்பாளர்களின் சொத்தாக இருக்கிறது. இது தொடர்பாக அவர்கள் விரைவாக கவனத்தில் எடுக்க வேண்டும். நம்பிக்கை பொறுப்பாளர்கள் ஒரு முடிவுக்கு வந்தோ அல்லது தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்தோ இவற்றை செயல்படுத்த வேண்டும். நிதி சம்பந்தமான விடயங்களுக்கு நாங்கள் ஏற்பாடு செய்வோம்.

நல்லூர் மந்திரிமனையை நம்பிக்கை பொறுப்பாளர் புனரமைப்பு செய்வது என்று சொன்னால், ஏற்கனவே நிதி இல்லை என்று தெரிவித்தார்கள். அதற்கு செலவில்லாமல் நாங்கள் நிதி உதவி செய்வதாக உறுதியளிக்கிறோம். அந்த முடிவுக்கு அவர்கள் வர வேண்டும். இல்லையென்றால் தொல்லியல் திணைக்களம் பொறுப்பு எடுத்து செய்வதற்கு நம்பிக்கை பொறுப்பாளர்கள் அங்கீகாரம் வழங்க வேண்டும். அந்த அங்கீகாரத்தின் ஊடாக திணைக்களத்துடன் நாங்கள் ஒரு சிறிய ஒரு அமைப்பை உருவாக்கி நிதியை பெற்று இந்த வேலையை உடனடியாக செய்ய முடியும். ஆகக் கூடியது இரண்டு கிழமைக்குள் இதனை நிறைவேற்றுவதற்கான முயற்சி ஆரம்பிக்கப்பட வேண்டும்.(18ம் பக்கம் பார்க்க)

# கம்மன்பிலவின் நூல் வெளியீட்டு விழாவில் இடையில் வெளியேறிய சஜித்



பிவித்துரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் சட்டத்தரணியுமான உதய கம்மன்பிலவினால் எழுதப்பட்ட ஈஸ்டர் 'தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை தேடிய பயணம்' என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலர் தமக்குக் கிடைத்த கடும் கண்டனத் தொலைபேசி அழைப்புகள் காரணமாகவே நிகழ்வின் இடையிலேயே வெளியேறியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த நிகழ்வு கொழும்பு சம்புத்தத்வ ஜயந்தி மந்திரயவில் நடைபெற்றது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதைத் தேர்தல் மேடைகளில் தொடர்ச்சியாகக் கூறிவிட்டு தற்போது அதே தரப்பினரின் நிகழ்வில் கலந்து கொண்டு அவர்கள் செய்ததை நியாயப்படுத்துதல் மிகவும் கேவலமான மற்றும் கீழ்த்தரமான செயல் எனத் தொலைபேசி மூலம் அழைத்தவர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர்களுக்குத் தொலைபேசி மூலம் கண்டனம் தெரிவித்தவர்களில் சில கத்தோலிக்க குருமார்களும் (18ம் பக்கம் பார்க்க)


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# 2025ம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் வடக்கு மாகாணம் முதலிடம்!

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள 2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கான தகுதியைப் பெற்ற மாணவர்களின் வீதத்தில் வடக்கு மாகாணம் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது. கடந்த ஆண்டுகளை விட இம்முறை வடக்கு மாகாணத்தின் கல்விச் சாதனைகள் மிகச் சிறந்த நிலையை எட்டியுள்ளன.

இம்முறை உயர்தரப் பரீட்சைக்கு வடக்கு மாகாணத்திலிருந்து தோற்றிய மொத்தப் பரீட்சார்த்திகளில் (பாடசாலை மாணவர்கள் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள்) 9,191 மாணவர்கள் பல்கலைக்கழகப் பிரவேசத்துக்குத் தகுதி பெற்றுள்ளனர். இது பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர்களின் அடிப்படையில் 65.19 சதவீதமாகும். இதன் மூலம் மாகாணங்களுக்கிடையிலான தரவரிசையில் வடக்கு மாகாணம் தேசிய மட்டத்தில் பெருமையுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

மேலும் உயிரியல் பிரிவு மற்றும் கலைப் பிரிவுகளிலிருந்து பல்கலைக்கழகப் பிரவேசத்துக்குத் தகுதி பெற்ற மாணவர்களின் சதவீதத்தில் தேசிய ரீதியில் முதலிடத்தையும், பௌதீக விஞ்ஞானம் மற்றும் வர்த்தகப் பிரிவுகளிலிருந்து பல்கலைக்கழகப் பிரவேசத்துக்குத் தகுதி பெற்ற மாணவர்களின் சதவீதத்தில் தேசிய ரீதியில் ஐந்தாம் இடத்தையும் வடக்கு மாகாணம் இம்முறை பெற்றுக் கொண்டுள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழகத் தகுதியைப் பெற்றவர்களின் வீதத்தில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்த வடக்கு மாகாணம், இம்முறை தனது அடைவு மட்டத்தை மேலும் உயர்த்தி முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது. அதேவேளை, பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஒப்பிடுகையில் வடக்கு மாகாணம் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதற்கு மேலதிகமாக, இம்முறை மாகாண ரீதியாக 534 மாணவர்கள் சகல பாடங்களிலும் அதிவிசேட சித்தியான 'ஏ' (3ஏ) பெறுபேற்றைப் பெற்றுள்ளனர். இது தோற்றிய மொத்தப் பரீட்சார்த்திகளில் 3.79 சதவீதமாகும். 3ஏ சித்திகளைப் பெற்ற மாணவர்களின் வீதத்தின் அடிப்படையிலான தரவரிசையிலும் வடக்கு மாகாணம் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பிடித்து மேலும் ஒரு சாதனையைத் தனதாக்கியுள்ளது.

# ஒப்பந்தம் அல்லது மோதல் மூலம் இலக்குகளை அடைவோம்!



நாம் இன்னும் நிறைவேற்ற வேண்டிய இலக்குகள் நிறைய உள்ளன. அதனை இஸ்ரேல் ஒப்பந்தம் மூலமாகவோ அல்லது சண்டையிட்டோ அடையும் என அந்நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறினார்.

தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்டதை தொடர்ந்து நாட்டு மக்களிடம் பேசிய பெஞ்சமின் நெதன்யாகு, இஸ்ரேலியர்களின் மன உறுதிக்கு நன்றி தெரிவிக்கிறேன். எங்கள் அற்புதமான மக்களே, உங்களுக்கு நான் நன்றி கூற விரும்புகிறேன். குண்டுவீச்சிலிருந்து தப்பிக்க பாதுகாப்பான தங்குமிடங்களில் நீங்கள் மன உறுதியைக் காட்டினீர்கள். இதனால் நாம் அனைவரும் இணைந்து மாபெரும் வெற்றிகளை அடைந்தோம்.

போர்க்களத்தில் உள்ள நமது வீரர்கள் மற்றும் உள்நாட்டில் உள்ள நீங்கள் அனைவரும் முக்கியமானவர்கள். ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தப் போரில் உயிர் நீத்த நமது அன்புக்குரியவர்களுக்கு நான் தலைவணங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

துயரத்தில் வாடும் குடும்பங்களை அரவணைக்குமாறும், காயமடைந்த நமது அன்புக்குரியவர்கள் விரைவில் குணமடைய விழையுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

என் சகோதர சகோதரிகளே, இஸ்ரேல் தேசம் மகத்தான வெற்றிகளை அடைந்துள்ளது. சமீப காலம் வரை முற்றிலும் கற்பனையாகத் தோன்றிய வெற்றிகள் இவை. ஈரான் முன்னெப்போதையும் விட பலவீனமாக உள்ளது. இஸ்ரேல் முன்னெப்போதையும் விட வலிமையாக உள்ளது.

இந்தத் தருணம் வரை, நான் ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாம் இன்னும் நிறைவேற்ற வேண்டிய இலக்குகள் நிறைய உள்ளன. அவற்றை நாம் உடன்படிக்கை மூலமாகவோ அல்லது மீண்டும் சண்டையைத் தொடங்குவதன் மூலமாகவோ அடைவோம்' என்று அவர் கூறினார்.

# தமிழ்நாட்டுத் தேர்தல் களம்

தமிழ்நாட்டில் சட்டசபை தேர்தல் பிரசாரங்கள் தீவிரமடைந்திருக்கின்றன. ஆறு தசாப்தங்களாக திராவிட இயக்கத்தின் இரு பிரதான கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகமும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் மாறி மாறி மாநிலத்தை ஆட்சி செய்து வந்திருக்கின்ற போதிலும் அவை பெரும்பாலும் மற்றைய அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைத்தே தேர்தல்களைச் சந்தித்து வந்திருக்கின்றன.

தேர்தல் கூட்டணி அரசியல் இந்த தடவை அதன் உச்சத்தில் இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. தி.மு.க.வும் அண்ணா திமு.க.வும் முன்னைய தேர்தல்களை விடவும் கூடுதல் எண்ணிக்கையான கட்சிகளுடன் கூட்டணி அமைத்துக் கொண்டு களத்தில் இறங்கியிருக்கின்றன.

தி.மு.க.வின் கூட்டணியில் இந்திய காங்கிரஸும் அண்ணா தி.மு.க.கூட்டணியில் பாரதிய ஜனதா கட்சியும் பிரதான தேசியக் கட்சிகளாக இருக்கின்றன. இவ்விரு திராவிட இயக்க கட்சிகளும் அறுபது வருடங்களாக மாநிலத்தை ஆட்சி செய்த இலட்சணத்தை அவை இந்த தடவை தேர்தல் அறிக்கைகளில் வாக்குறுதி அளித்திருக்கும் இலவசங்களினதும்' பணக் கொடுப்பனவுகளின் பட்டியல்கள் அம்பலப்படுத்தி நிற்கின்றன.

திராவிட இயக்கத்தின் ஆட்சிகள் தமிழ்நாட்டு மக்களில் பெரும் பான்மையானவர்களின் வாழ்க்கைத் தரங்களை குறிப்பிடத்தக்க உயர்த்தியிருந்தால் திமு.க. தலைவரான முதலமைச்சர் மு.க. ஸ்ராலினும் அண்ணா தி.மு.க. தலைவர் எடப்பாடி பழனிசாமியும் தாங்கள் வெற்றி பெற்றால் இலவசங்களை வழங்குவதாக ஏட்டிக்குப் போட்டியாக அறிவிப்புக்களைச் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

தமிழ்நாட்டு அரசியலில் சினிமாவின் செல்வாக்கை தடுக்க முடியாது என்ற போதிலும், பல வருடங்களுக்கு பிறகு சினிமா நடிகர் ஒருவரின் செல்வாக்கு தேர்தல் முடிவுகளில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையை ஜோசப் விஜயின் அரசியல் பிரவேசம் ஏற்படுத்தியிருக்கிறது.

அரசியலுக்கு வரும் சகல சினிமா நடிகர்களையும் எம். ஜி. ஆருடன் ஒப்பிட முடியாது என்ற போதிலும், அண்மைய காலத்தில் அரசியலில் பிரவேசித்தவர்களில் ஓரளவுக்கேனும் கணிசமான வாக்கு வங்கியை தன்வசம் வைத்திருந்தவர் என்றால் விஜயகாந்தைக் கூறலாம்.

ஆனால் அவரும் தனது இறுதிக்கால குழப்பகரமான நடத்தைகள் மூலமாக தனது கட்சியை ஒரு உதிரிக்கட்சியாக்கி விட்டே மறைந்து போனார்.

தற்போது விஜயின், தமிழக வெற்றிக் கழகத்தின் பிரசாரக் கூட்டங்களில் திரளும் மக்கள் கூட்டம் மாநிலத்தின் பிரதான கட்சிகளை தடுமாற வைத்திருப்பது உண்மைதான். விஜயகாந்தைப் போன்றே விஜயும் தனது முதன் முதலான தேர்தல் களப் பரீட்சைக்கு எந்த கட்சியுடனும் கூட்டணி சேராமல் தனியாக முகங்கொடுக்கிறார்.

அவருக்கு இருப்பதாக கருதப்படும் மக்கள் செல்வாக்கு மாநிலத்தில் மும்முனைப் போட்டிக்கு களம் அமைக்குமா அல்லது இரு பிரதான திராவிட இயக்கக் கட்சிகளின் வாய்ப்புக்களில் எந்தளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதே இன்று எழுகின்ற முக்கியமான கேள்வி.

தி.மு க. அதன் வரலாற்றில் ஒருபோதுமே அடுத்தடுத்து இரு பதவிக் காலங்களுக்கு ஆட்சியில் இருந்ததில்லை. அந்த போக்கை இந்த தடவை தேர்தல் மாற்றியமைக்குமா என்பதும் அண்ணா தி.மு.க.வின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஒன்றாக தேர்தல் அமையுமா என்பதும் அடுத்த முக்கியமான கேள்வி.

# வெடுக்குநாறிமலை பௌத்த மதத்திற்குரியது!

வெடுக்கு நாறிமலையில் உள்ள மத அடையாளங்கள் பௌத்த மதத்திற்கு உரியவை. அது அமைந்துள்ள பகுதியை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவி தெரிவித்துள்ளார். பாராளுமன்றில் 09 ஏப்ரல் 2026 இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

வெடுக்குநாறி மலையில் உள்ள நினைவுச்சின்னங்கள் பௌத்த நினைவுச்சின்னங்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளன. இது கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குகை கல்வெட்டுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டவிரோத கட்டுமானங்களால் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன. இத்தகைய கட்டுமானங்கள் அந்த இடத்தின் தொல்பொருள் நிலப்பரப்பை சேதப்படுத்தியுள்ளன. இது தொடர்பாக தொல்பொருள் திணைக்களம் ஏற்கனவே சட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது

எவரேனும் இந்த இடத்தில் மத வழிபாடுகளைச் செய்வதற்கு எந்தத் தடையும் இல்லை. ஆனால், அவ்வாறு செய்யும் போது தொல்பொருட்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படக்கூடாது. தொல்பொருட்களை அழிப்பது, சிதைப்பது, இடமாற்றுவது அல்லது மாற்றுவது ஆகியவை தொல்



பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் (Antiquities Ordinance) கீழ் சட்டமீறல்களாகக் கருதப்படும். விரைவில் இதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்று தெரிவித்தார்.

# இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட ஒரு போதும் இடமில்லை - சீனாத் தூதுவர் தகவல்

(5ம் பக்கத் தொடர்ச்சி) சுட்டிக்காட்டிய அவர் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு சீன அரசாங்கம் தொடர்ந்து ஆதரவளிக்கும் மேற்காசியாவில் தற்போது ஏற்பட்டுள்ள போர்நிறுத்தம் நீடிக்க வேண்டும் என சீனா விரும்புவதாகவும், எவ்வாறாயினும் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய எந்தவொரு சவாலையும் எதிர் கொள்ளவும் இலங்கைக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கவும் சீனா விழிப்புடன் இருப்பதாகவும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

# சாராஜெஸ்மின் உயிருடன் இருக்கின்றாரா? டி.என்.ஏ. யாருடையது? பாராளுமன்றத்தில் சாணக்கியன் சரமாரியான கேள்வி!

சாரா ஜெஸ்மின் விடயத்தில் மூன்றாவது தடவையாக டி.என்.ஏ பரிசோதனை செய்யவில்லை என்று அவரின் தாய் தற்போது குறிப்பிடுகிறார். மூன்று டி.என்.ஏ பரிசோதனைகள் செய்திருந்தால், அந்த டி.என்.ஏ யாருடையது? கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் சாரா ஜெஸ்மினின் வீட்டுக்கு சென்று அவரிடம் தாயிடம் 'உங்களின் மகள் இறக்கும் போது இரண்டு மாத கர்ப்பிணி, அவரை இராணுவம் அடக்கம் செய்துள்ளது' என்றும் பொலிஸார் கூறியுள்ளனர். ஆனால் சாரா ஜெஸ்மின் உயிருடன் இருப்பதாக அமைச்சர் கூறியிருந்தார். இதனால் இந்த விடயத்தில் சில சந்தேகங்கள் இருக்கின்றன. இதனை திசை திருப்ப சில அதிகாரிகள் முயற்சிக்கின்றனரா என்ற சந்தேகங்கள் உள்ளன என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் குழுத் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 09 ஏப்ரல் 2026 வியாழக்கிழமை நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முன்னெடுக்கும் விசாரணைகள் தொடர்பில் அரசாங்கத்தை பாராட்டுகின்றோம். கட்சி பேதமின்றி அரசாங்கத்திற்கு நன்றியை கூறிக்கொள்கினறோம். சுரேஷ் சலே போன்றவர்களை கைது செய்வார்களா? என்ற சந்தேகம் கடந்த காலங்களில் காணப்பட்டது.



ஆனால் தற்போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார். வரவேற்கிறோம்.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் உதய கம்மன்பில நூல் ஒன்றை தற்போது வெளியிட்டுள்ளார். 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இது போன்ற ஒரு புத்தகத்தை வேட்டை' என்ற பெயரில் பிள்ளையான் எழுதியிருந்தார். ஆனால் அவர் புத்தகத்தை எழுதக்கூடிய நிலையில் இருக்கும் ஒருவரா? இல்லையா? என்று நாட்டில் அனைவருக்கும் தெரியும். எவ்வாறாயினும் இந்த புத்தகத்தை ரொஹான் குணரட்ன என்ற நபரே எழுதியுள்ளார்.

இதனை பொறுப்புடன் கூறுகின்றேன். இந்த புத்தகத்திற்கு ஒருவர் வழங்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ரொஹான் குணரட்ன எழுதியுள்ளதுடன், அதனை பிள்ளையான் வெளியிட்டார். இப்போது அது போன்ற புத்தகத்தையே கம்மன்பிலவும் வெளியிட்டுள்ளார். இந்த புத்தகம் தொடர்பிலும் எமக்கு சந்தேகங்கள் உள்ளன.

முக்கியமான விடயம் என்னவென்றால் ரொஹான் குணரட்ன என்ற நபரின் அலுவலகம், பத்தரமுல்ல கடவுச்சீட்டு அலுவலக கட்டடத்துக்கு அருகில் இருந்தது. பிள்ளையானின் புத்தகத்திற்கு தேவையான தகவல்களை வழங்க திரிபொலி தரப்புடன் தொடர்புடைய ஓட்டமாவடியை சேர்ந்த கலீல் என்ற நபரே அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டுக்கு பின்னர் கலீல், 2015–2019 காலத்தில் பிள்ளையானுடன் ஒன்றாக சிறையில் இருந்தார். இந்நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் முறையாக நடக்க வேண்டும் என்று அரசாங்கத்தினால் ஜனாதிபதி மட்டத்தில் ஆர்வமாக இருந்தாலும் பொலிஸார் தொடர்பில் என்னால் சான்றுகளை வழங்க முடியாது. அதற்கு காரணம் பொலிஸில் உள்ள குழுவொன்று இந்த விசாரணையை திசைத்திருப்ப அல்லது இந்த விசாரணையை தவறான பக்கத்திற்கு கொண்டு செல்ல இன்றும் முயற்சிக்கின்றனர் என்ற சந்தேகம் காணப்படுகிறது..

இதேவேளை இஸ்மயில் இசாக் என்ற நபர் தொடர்பில் நான் இந்தப் பாராளுமன்றத்துக்கு ஆவணங்களை சமர்ப்பித்துள்ளேன். இந்த நபர் கடந்த செப்டம்பர் 4ஆம் திகதி இந்த நாட்டில் இருந்து சவூ தி அரேபியாவுக்கு சென்றுள்ளார். இதன்படி இவர் நாட்டில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். சிலர் சாட்சியாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரை சந்திக்கும் போது கீழ்மட்ட அதிகாரிகள் அதற்கு கோபப்பட்டு அதனை திசை திருப்புகின்றனர்.

இதனால் இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். வழக்குகளில் சாட்சியங்கள் தொடர்பான விளக்கங்களை பொலிஸாரே முன்வைக்கின்றனர். இதனால் இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

சாரா ஜெஸ்மின் விடயத்தில், தன்னிடம் மூன்றாவது தடவையாக டி.என்.ஏ பரிசோதனை செய்யவில்லை என்று அவரின் தாய் தற்போது குறிப்பிடுகிறார். மூன்று டி.என்.எ பரிசோதனைகள் செய்திருந்தால், மூன்றாவது டி.என்.எ யாருடையது?

(18ம் பக்கம் பார்க்க)

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# தேசிய மக்கள் சக்தியைத் தவிர வேறெந்த அரசியல் கட்சியாலும் ஏன் தனித்தியங்க முடியவில்லை

போரில் தாங்கள் வென்று விட்டதாக ஈரான் உயர்பீடம் அறிவித்து ஒரு வாரத்துக்கு மேலாகியும், வளைகுடா நிலைவரம் அவ்வாறு காணப்படவில்லை. இஸ்ரேலுக்காக போரை ஆரம்பித்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஆப்பிழுத்த நிலையில் போரைத் தொடரவும் முடியாமல் அதனை முடிக்கவும் முடியாமல் தவிப்பது போல் தெரிகிறது.

அமெரிக்காவுக்கு ஈரானில் கல்லறை கட்டப்படுமென அந்நாடு அச்சுறுத்தியுள்ளது. இந்தப் பயமுறுத்தல் ஒரு புறமிருக்க, அமெரிக்க பாதுகாப்பு வட்டத்துள் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளது அம்பலமாகியுள்ளது.

அமெரிக்க அட்டர்னி ஜெனரலாக பதவியேற்ற நாளிலிருந்து ட்ரம்பின் நிழலாக இயங்கி வந்த பாம் மொன்டியை அப்பதவியிலிருந்து அதிரடியாக நீக்கி விட்டு துணை அட்டர்னி ஜெனரலை அப்பதவிக்கு ட்ரம்ப் நியமித்துள்ளார். அமெரிக்க ராணுவத்தின் உயர் தளபதியான ராண்டி ஜோர்ஜை உடனடியாக பதவி விலகுமாறு பாதுகாப்புச் செயலர் பீட் ஹெக்சிட் உத்தரவிட்டது நடைமுறைக்கு வந்துள்ளது. அத்துடன் மேலும் பல உயரதிகாரிகள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சில வாரங்களுக்கு முன்னராக அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புச் செயலர் கிறிஸ்டி நோயெம் அவர்களை காரணம் எதுவும் கூறாது பதவி நீக்கம் செய்தார் ட்ரம்ப். தற்போது அரச உயர் மட்டத்தில் பணியாற்றுபவர்கள் எவருக்குமே அவர்களின் பதவி நிரந்தரமற்றதாகி விட்டதென வெள்ளை மாளிகை அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதனை எழுதிக் கொண்டிருக்கையில் வெளிவந்துள்ள செய்தி, அமெரிக்காவின் இரண்டு உயர்ரக போர் விமானங்கள் ஈரான் வான் பரப்பில் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன என்பது. இதனை ட்ரம்ப் நிர்வாகம் உண்மையில்லை எனக் கூறுகிறது. ஆனால், அந்த விமானத்தின் ஓட்டிகளை அமெரிக்கா தேடிக் கொண்டிருப்பதாக இன்னொரு செய்தி கூறுகிறது. போர்க்காலத்தில் உண்மைகள் பொய்யாக்கப்படுவதும், பொய்கள் உண்மையாக்கப்படுவதும் சகஜம் என்பதை முள்ளிவாய்க்காலில் கண்டவர்கள் ஈழத்தமிழர்.

அமெரிக்கா அடிக்கடி வெவ்வேறு வகையான போர் நிறுத்தத்தை உச்சரித்து வருகிறது. ஆனால் ஈரான் அவை எல்லாவற்றையுமே நிராகரித்து வருகிறது. அமெரிக்க திட்டங்களை நிர்மூலமாக்கும்வரை போர் தொடரும் என்ற அறிவித்தலும் ஈரானுடையது. நிலைமையைப் பார்க்கின் போர் மேலும் சில வாரங்களுக்கு நீடிக்கலாம் போல் தெரிகிறது.

வளைகுடா போர் என்று இது அழைக்கப்பட்டாலும் உலகளாவிய ரீதியில் சகல நாடுகளும் இதன் பாதிப்பை அனுபவிக்கின்றன. எரிபொருள் தட்டுப்பாடு, அதனால் ஏற்பட்ட விலை உயர்வு இரண்டுமே ,தற்கான மூலம். உணவுப் பொருட்களின் விலை ரொக்கட் வேகத்தில் எகிறுகிறது. ,தனைக் கட்டுப்படுத்தும் நிலை எவரிடமும் இல்லை. இதனைச் சுட்டிக் காட்டி போரை முடிவுக்குக் கொண்டு வரும் நிலையில் வல்லமையும் எந்த நாட்டிடமும் இல்லை. சர்வதேச அமைப்புகளாலும் இதனை சாத்தியப்படுத்த முடியாது.

இலங்கையில் ,தனால் ஏற்பட்டு வரும் பாதிப்பு அப்பாவி மக்களின் வாழ்வை பெருமளவில் இன்னலுக்குள்ளாக்குகிறது. பாடசாலைகளுக்கு வாரத்தில் ஒரு நாள் மேலதிக விடுமுறை. அலுவலகங்கள் வாரத்துக்கு ஒரு நாள் பூட்டு. தேவைப்படுமாயின் ஊழியர்களை வீட்டிலிருந்து பணியாற்றுமாறு நிர்ப்பந்திக்கும் நிலை காணப்படுகிறது.

வளைகுடா யுத்தம் தொடருமானால் இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை பெருமளவு பாதிக்கப்படுமெனவும், உணவுப் பொருள் ,ன்மை மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிக்குமெனவும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக தெற்காசிய ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. ஹோர்மூஸ் நீரிணையை ஈரான் மூடியுள்ளதால் உணவு விநியோக சங்கிலி துண்டிக்கப்பட்டுள்ளதென சுட்டிக்காட்டியுள்ள ஐக்கிய நாடுகள் சபை, உணவுப் பொருள்களின் விலை உயர்வினால் வளர்முக நாடுகளின் உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுமென அறிவித்துள்ளது.

இவ்வாறான நெருக்கடி வேளையில் இலங்கை அரசுக்கு உதவ அதன்



நட்பு நாடுகள் முன் வந்துள்ளன. பல வெளிநாடுகளின் அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள் நேரடியாக கொழும்புக்கு விஜயம் செய்து தாங்கள் வழங்கக் கூடிய ஆதரவை தெரிவித்து வருகின்றன. நெருக்கடிக் கால உதவிகளாயினும் அரசியல் கலப்பும் ஆங்காங்கே காணப்படுவதால் நாடி வரும் சில உதவிகளை ஏற்றுக்கொள்ளும் நிலையில் ஆட்சித்தரப்பு இல்லாதிருப்பதையும் காணமுடிகிறது.

நாட்டை ஆள்வது அரசாங்கமாயினும் அது வெறுமனே ஆளுந்தரப்பாக இருக்க முடியாது. முக்கியமாக நெருக்கடி காலங்களில் எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்தோடு ,ணைந்து ஆரோக்கியமான ஆலோசனைகளை வழங்கி ஒன்றுபட்டு செயற்பட்டால் மட்டுமே மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை ஓரளவேனும் குறைக்க முடியும்.

ஆனால், இலங்கையைப் பொறுத்தளவில் அவ்வாறான சூழ்நிலை காணப்படவில்லை. எரிகிற நெருப்பில் பிடுங்குவது லாபம் என்பதுபோல வளைகுடாவினால் உருவாக்கப்பட்ட எதிர்பாராத பாதிப்பை தங்களுக்கான அரசியல் ஆதாயமாக்க எதிர்க்கட்சிகள் துடித்துக் கொண்டிருக்கின்றன. இயற்கை அனர்த்தமானாலும் சரி, எதிர்பார்க்காத போர்ச்சூழலானாலும் சரி அரசாங்கத்தை குற்றஞ்சாட்டி அதனூடாக லாபம் பெறுவதை எதிர்க்கட்சிகள் தலையாய பணியாக மேற்கொள்கின்றன. இவற்றுக்கு உதாரணமாக அண்மைய சில நிகழ்வுகளைப் பார்க்கலாம்:

முன்னைய ஆட்சிக் காலங்களில் புலனாய்வுத்துறையில் பணியாற்றிய அதிகாரிகள் பலர் இப்போது புலனாய்வுத்துறையின் ஆய்வுத்துறையின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சட்டமும் நீதியும் சுயாதீனமாக ,யங்குமென ஆட்சித் தரப்பு மீண்டும் மீண்டும் சொல்லி வருகிறது. ஆனால் இதனை ஏற்கும் நிலையில் எதிரணிகள் இல்லை.

இலங்கையின் யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கே அஞ்சாத புலனாய்வாளர்கள் தற்போதைய ஆட்சியாளர்களின் அச்சுறுத்தலுக்கு அஞ்சப் போவதில்லை என்று சவால் விட்டுள்ளார் ராஜபக்சக்களின் இளைய வாரிசான நாமல் பேபி. இது நீதியான விசாரணைக்கு இடையூறு விளைவிக்கும் தன்மையானது. விடுதலைப்புலிகளுடனான யுத்தம் உச்சக் கட்டத்தில் இருந்த வேளையில் தமது தந்தையாரான ஜனாதிபதி மகிந்த வெளிநாடு ஒன்றில் மறைந்திருந்து விட்டு, யுத்தம் முடிவுற்றதாக அறிவித்த பின்னர் நாடு திரும்பி கட்டுநாயக்க விமானத்தளத்தில் இறங்கியதும் அந்த மண்ணை எதற்காக தொட்டு வணங்கினார் என்பதை நாமல் ஏனோ மறந்து விட்டார்.

தமது சித்தப்பாவான கோதபாயவை சிம்மாசனம் ஏற்றிய அவரது ஆதரவாளர்களுக்கு அஞ்சியே அவர் நாட்டை விட்டு கப்பலில் தப்பியோடினார் என்பதையும் நாமல் மறந்து விட்டார். இன்னொரு சித்தப்பாவான பசில் ராஜபக்ச ஊழல் வழக்குகளுக்கு முகங்கொடுக்க முடியாது அஞ்சியே இன்னமும் அமெரிக்காவில் மறைந்திருக்கிறார் என்பதையும் கூட நாமல் மறந்து விட்டார் போல் தெரிகிறது.

இங்கு குறிப்பிடப்பட வேண்டிய இன்னொருவர் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதியான உதய கம்மன்பில. இன்னொரு தோற்றுப்போன அரசியல்வாதியான விமல் வீரவன்சவின் தோழர் இவர். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக சிலர் கைதாகி தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வரும் வேளையில் ஒரு நூலை ,வர் வெளியிட்டுள்ளார். இது முன்னைய ஆட்சியாளர்களான ராஜபக்சக்களை நிரபராதிகளாக வெளிக்காட்டுவதற்கான ஒரு முயற்சி என்று பொதுவெளியில் பேசப்படுகிறது.

இந்நூல் வெளியீட்டு விழாவில் முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்தவும் கோதபாயவும், இவர்களது ஆட்சிக்காலத்தில் அமைச்சர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இருந்தவர்களே பெருமளவில் காணப்பட்டனர். சிங்கப்பூரில் சிகிச்சை பெற்றுவரும் ரணில் விக்கிரமசிங்க பங்குபற்றவில்லை. எதிர்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச இதில் பங்குபற்றியிருந்தாலும் நூலின் உள்ளடக்கத்தை தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாதென்று சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தி கட்சிச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

உதய கம்மன்பிலவின் நூலில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் கேள்விக்குரியவை எனவும், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பவர்களை நிரபராதி

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

களாக சித்தரிக்கும் நோக்கம் கொண்டதெனவும் சொல்லப்படுகிறது. இதனை முற்கூட்டியே தெரிந்து கொண்டதாலேயே ராஜபக்ச சகோதரர்கள் தமது சகாக்களுடன் வெளியீட்டு மண்டபத்தில் குழுமியிருந்தனர் என்றும் சமூக ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. இந்நூலின் தரவுகள் ஏற்கனவே உதய கம்மன்பிலவிடம் இருந்திருந்தால் பலர் கைதாவதற்கு முன்னரே இதனை ஏன் வெளியிடவில்லை என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இந்நூலினூடாக விசாரணைகளை திசை திருப்பி பொதுமக்கள் மத்தியில் ராஜபக்சக்களை குற்றமற்றவர்களாகக் காட்டும் நோக்கம் உள்ளதெனவும் சுட்டிக் காட்டப்படுவதை புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

கொழும்பு நீதிமன்ற கொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு ரகசியப் பொலிசாலும் விசாரணையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ,சாரா செவ்வந்தியின் பிறந்தநாளை கொண்டாடுவதற்கு பொலிஸ் அதிகாரி ஒருவர் மேற்கொண்ட முயற்சி பாதுகாப்புத்துறைக்குள் இருக்கும் சிலரது நம்பகத் தன்மையை வெளிக்கொணர்ந்துள்ளது. இது தொடர்பாக உயர் அதிகாரியொருவர் உடனடியாக நடவடிக்கைக்கு(22ம் பக்கம் பார்க்க)

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

04 ஏப்ரல் 2026 முதல் 10 ஏப்ரல் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

### மேலதிக விபரங்களுக்கு:-

### ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு நல்லதம்பி நவரட்ணலிங்கம்

இறுப்பிட்டி புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் தலையாட்டி வேலணையை வதிவிடமாகவும் மார்க்கம் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நல்லதம்பி நவரட்ணலிங்கம் அவர்களது 31ம்நாள் நினைவுநாள் 29 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நல்லதம்பி நவரட்ணலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவுகள்



### திருமதி செல்வநாயகி சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் ஆகியோரது நினைவு நாளையொட்டி கனடாவில் வசிக்கும் அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 09 ஏப்ரல் 2026 வியாழக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் இணையரை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 16வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னையா நல்லதம்பி

யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னையா நல்லதம்பி அவர்களுடைய 16வது ஆண்டு நினைவு நாள் 30 மார்ச் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னையா நல்லதம்பி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பாக்கியம் மயில்வாகனம்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் மாங்கொல்லை காங்கேசன்துறையை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் மயிலவாகனம் அவர்களுடைய மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 12 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பாக்கியம் மயில்வாகனம் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு செல்லத்தம்பி வரதராஜன்

புங்குடுதீவு 10ம் வட்டாரம் கண்ணகை அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பொன்னாந்தோட்டத்தை வதிவிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்லத்தம்பி வரதராஜன் அவர்களுடைய 11வது ஆண்டு நினைவு நாள் 12 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அவரது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு செல்லத்தம்பி வரதராஜன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2ம் மாத நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி கந்தசாமி

அனலைதீவு 5ம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது 2ம்மாத நினைவு நாள் 18 ஏப்ரல் 2026 சனிக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



20 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதிஇல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



22 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



22 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நிர்மலகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜெனனி நிர்மலகுமாரின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஜெனனி தனது பெற்றோர்கள் சகோதரத்துடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



23 மார்ச் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கஜன் கௌசிகா இணையர்களது ஏழாவது ஆண்டு இருமன இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்.



23 மார்ச் 2026 திங்கட்கிழமை யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பிறேம்குமார் முருகேசு அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



30 மார்ச் 2026 திங்கட்கிழமை இணுவிலைச் சேர்ந்த திரு சின்னையா நல்லதம்பி அவர்களது 16வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



30 மார்ச் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீகுமார் ரோகினிதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அம்சயன் ஸ்ரீகுமாரின் 16வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அம்சயன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



09 ஏப்ரல் 2026 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி செல்வநாயகி சோமசுந்தரம் அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




10 ஏப்ரல் 2026 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



# ஜே.வி.பி. ஒரு கட்சி ஆட்சியை நோக்கி நகர்கின்றதா?

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



ஜே.வி.பி ஒரு கட்சி ஆட்சியை நோக்கி நகர்கின்றது – இப்படியானதொரு பார்வை சிலரிடம் உண்டு. இவ்வாறான வாதம் தென்னிலங்கையிலிருந்து வருவதை விடவும் வடக்கிலிருந்து தான் வருகின்றது. இலங்கை தமிழரசுகட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் அண்மையில் இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன் வைத்திருக்கின்றார். அவர் இந்தக் குற்றச்சாட்டை புதுடில்லியில் வைத்து முன் வைத்திருப்பது கூடுதல் அரசியல் முக்கியத்துவம் உடையது.

இந்திய சட்டத்தரணிகள் சங்கத்தின் நிகழ்வு ஒன்றிற்காக சென்றிருந்தவர், இந்திய பத்திரிகையாளர் நாராயண சுவாமிக்கு நேர்காணல் ஒன்றை வழங்கியிருக்கின்றார். இதன் போதே, மேற்படி குற்றச்சாட்டை முன் வைத்திருக்கின்றார்.

சுவாமியின் கட்டுரையின்படி தற்போது ஆட்சியிலிருக்கும் மாக்ஸ்சிஸ்ட் கட்சியான தேசிய மக்கள் சக்தியானது, இலங்கையை ஒரு கட்சி ஆட்சியை நோக்கி கொண்டு செல்லும் ஆபத்து காணப்படுகின்றது சுமந்திரனின் பார்வையில், அரசாங்கமானது, தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கில், தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு, (அரச கட்டமைப்புக்களுக்கு மாறாக) பிரஜா சக்தி என்னும் பெயரில், சமாந்தரமான அதிகார கட்டமைப்பை உருவாக்கி வருகின்றது. நடைமுறையில் இருக்கின்ற நிறுவனங்கள் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோர்களை ஓரங்கட்டும் நோக்கிலேயே இந்த விடயம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த அடிப்படையில் மேலும் பல விடயங்களை சுமந்திரன் குறித்த நேர்காணலில் பகிர்ந்து கொண்டிருப்பதாக நாராயண சுவாமியின் கட்டுரை நீள்கின்றது. இந்த சம்பாசனையின் போது, 1971இல் இலங்கை தமிழரசு கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் – நாங்களும் சோசலிசத்தை ஆதரிக்கின்றோம் ஆனால் நாங்கள் ஒரு கட்சி ஆட்சியை ஆதரிக்கமாட்டோம் என்று கூறியதாகவும் பதிவு செய்திருக்கின்றார். இதன் மூலம், ஜே.வி.பி ஒரு கட்சி ஆட்சியை நோக்கிச் செல்ல முற்படுகின்றது ஆனால் நாங்கள் (தமிழர்கள்) அதற்கு எதிராக நிற்போம் என்பதையே சுமந்திரன் அழுத்திக் குறிப்பிட முயற்சித்திருக்கின்றார்.

சுமந்திரன் எதிர்கட்சியை சேர்ந்த ஒருவர் அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில், ஜே.வி.பி ஊடுருவலை எதிர்க்கும், தமிழ்த்தேசிய கட்சிப் பின்புலத்தைக் கொண்ட ஒருவர் – எனவே அவர் ஜே.வி.பியின் மீது முன் வைக்கும் விமர்சனங்களை தர்க்கரீதியில் ஆராய்வது தான் சரியானது தர்க்கரீதியில் விடயங்களை ஆராயும் போக்கு தமிழ் அரசியல் உரையாடல்களில் மிகவும் குறைவு.

ஜே.வி.பியின் மீதான சந்தேகப் பார்வைக்கு அடிப்படையான காரணம் அவர்களுடைய கடந்த காலமாகும். ஜே.வி.பி அடிப்படையில் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டு அரசியல் பிரவேசம் செய்த ஒரு அமைப்பு அல்ல. ஆயுதப் புரட்சி ஒன்றின் ஊடாக இலங்கையின் ஒட்டுமொத்த அதிகாரத் தையும் கைப்பற்றலாம் என்று நம்பி முயற்சித்து தோல்வியுற்ற அமைப்பு. அவ்வாறு நம்பிய காலத்தில், அவர்களது எண்ணத்தில் இருந்தவை ஜனநாயக நாடுகள் அல்ல மாறாக சர்வாதிகார சீனா, கியூபா போன்ற நாடுகள் தான். அவ்வாறான நாடுகள் அனைத்துமே ஒரு கட்சி ஆட்சி யைக் கொண்டிருக்கும் நாடுகள். ஆனால் ஜே.வி.பியால் ஆயுதப் புரட்சியில் வெற்றிபெற முடியவில்லை .

மாறாக மிகவும் மோசமாக அழிக்கப்பட்டனர். ஒட்டுமொத்த இலங்கையை ஆயுதப் புரட்சியின் மூலம் கைப்பற்றலாம் என்பது ஒரு பகல் கனவு என்பதை அவர்கள் பின்னர் உணர்ந்து கொண்டனர். ஏனெனில் அதற்கான வாய்ப்பை இந்தியாவின் உடனடி அயல்நாடு என்னும் தன்மை அனுமதிக்காது. ஆயுத அரசியல் தோல்வியில் கிடைத்த படிப்பினையின் அடிப்படையிலேயே ஜனநாயகப் பாதைக்கு



திரும்பினர். ஒரு வேளை ஜே.வி.பி ஆயுதப் புரட்சியில் வெற்றி பெற்றிருந்தால் இலங்கைத் தீவில் ஒரு கட்சி ஆட்சியைத் தான் நிறுவியிருக்க முயற்சித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தேர்தலை வேண்டுமானால் ஒரு சம்பிரதாயமாக பின்பற்றியிருக்கலாம். அல்லது எதிர்க்கட்சிகள் மிகவும் பலவீனமாக இருக்கும் அரசியல் சூழலொன்றை ஏற்படுத்தியிருக்கலாம்.

ஏனெனில், புரட்சிகர ஜே.வி.பியின் காலகட்டம் என்பது எதிரணி அரசியல் கட்சிகளையும் புத்திஜீவிகளையும் இந்திய ஆதரவாளர்களையும் ஆயுதமுனையில் இலக்கு வைத்த காலம் தான். இதில் மறைக்க ஒன்றுமில்லை. இந்த விடயங்கள் எவற்றுக்காகவும் தாங்கள் வருந்த வேண்டிய அவசியமில்லை என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அண்மைய நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

அவர் நியூட்டனின் விதியை நினைவுபடுத்துகின்றார் அதாவது ஒவ்வொரு செயலுக்கும் அதற்கு சமாந்தரமான எதிர்த்தாக்கம் உண்டு. ரில்வினின் பார்வையில் ஜே.வி.பி செயலாற்றவில்லை – மாறாக, செயலுக்கு எதிர்வினையாற்றியது. அன்றைய ஜக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகள் தான் தங்களுடைய எதிர்வினைகளுக்கு காரணம். ஜக்கிய தேசியக் கட்சி அவர்களுடைய செயல்களுக்கு வருந்தாத போது நாங்கள் எதற்காக வருந்த வேண்டும் என்பது ரில்வினின் வாதம். தர்க்கரீதியில் வாதம் சரியானது தான் ஆனால் இதே தர்க்கம் விடுதலைப் புலிகளுக்கும் பொருந்தும் – இந்தியத் தலையீட்டுக்கும் பொருந்தும் – ஏன் அனைத்து கடந்தகால செயற்பாடுகளையும் நியூட்டனின் விதியைக் கொண்டு நியாயப்படுத்தலாம்.

ஜே.வி.பியின் அரசியல் அணுகுமுறைகள் தொடர்பில் சந்தேகம் எழுவதற்கான அடுத்த காரணம், அவர்களுடைய கடந்த கால அரசியல் கருத்தியல் நிலைப்பாடு. ஆரம்பகால ஜே.வி.பிக்கு சீனாவின் மீது ஒரு ஈர்ப்பிருந்தது. இந்தப் பின்புலத்திலிருந்து தான் அவர்களுடைய இந்திய எதிர்ப்பு அரசியல் நிலைப்பாடும் கருக்கொண்டது.

ஜே.வி.பியின் பிரபலமான ஐந்து அரசியல் வகுப்புக்களில் இந்திய விஸ்தரிப்பு வாதமும் ஒன்று. ஜே.வி.பியின் இவ்வாறான பின்னணியை மனதில் இருத்தி சிந்தித்தால், ஜே.வி.பி ஒரு வேளை ஒரு கட்சி ஆட்சியை நோக்கித் தான் நகர்கின்றதோ என்று சந்தேகம் எழுவது இயல்பானது தான்.

ஆனால் இலங்கைத் தீவில் ஒரு கட்சி ஆட்சியை ஏற்படுத்துவது சாத்தியமான ஒன்றா என்னும் கேள்விலிருந்து நோக்கினால் ஜே.வி.பி அப்படியானதொரு முயற்சியில் அதன் ஆற்றலை செலவிட முயற்சிக்குமா என்னும் கேள்வி தான் யதார்த்தமானதாகத் தெரிகிறது. ஏனெனில் இலங்கை அரசியல் கலாசாரம், குறிப்பாக தென்னிலங்கை அதற்கு இடம்கொடுக்கக் கூடிய ஒன்றல்ல.

எனவே தங்களுடைய கடந்த காலத்திலிருந்து கற்றுக் கொள்ளும் எண்ணத்திலிருக்கும் இன்றைய ஜே.வி.பியானது, இவ்வாறான விசப்பட்சையில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு என்பதே எனது பார்வை. மேலும் ஒரு வேளை உண்மையிலேயே ஜே.வி.பிக்கு அவ்வாறான எண்ணம் இருந்தாலும் கூட, அதனை எவ்வாறு நடைமுறைப் படுத்துவது? ஆனால் எதிர்க்கட்சிகள் மிகவும் பலவீனமாக .ருக்கக் கூடிய அரசியல் சூழலொன்றை ஏற்படுத்துவதில் ஜே.வி.பி அக்கறை செலுத்த முடியுமென்றால் அதற்கு வாய்ப்புண்டு. மகிந்த ராஜபக்சவின் காலத்திலும் இவ்வாறானதொரு சூழல் தென்பட்டது. அந்த வேளையில், இலங்கையின் அரசியல் தென்கிழக்காசிய அரசியல் பாதையை நோக்கி நகர்கின்றதா என்னும் கேள்வியும் முன் வைக்கப்பட்டது. மகிந்தராஜபக்சவின் சீன சார்பு நிலைப்பாட்டின் மீதான பார்வையிலிருந்தே இவ்வாறான கேள்வி எழுந்தது. விடயங்களை ஆழமாக நோக்கினால், பாராளுமன்ற பெரும்பாண்மையை அடையும் சந்தர்ப்பங்களில் தான் எதிரணிகள் பலவீனமடைகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் தான், ஆட்சியாளர்கள் தாங்கள் எண்ணுவதை முன்னெடுக்க முயல்கின்றனர். இலங்கை அரசியலில் இந்த நிலைமையை முதலில் ஏற்பட்டது ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஜக்கிய தேசியக் கட்சிக் காலத்தில் தான். ஜெயவர்த்தன தன்னிடமிருந்த பாராளுமன்ற பெரும்பாண்மையின் அடிப்படையில் தான் தான் விரும்பியவாறு இலங்கையின் அரசியலை முன்னெடுத்தார். அரசியலமைப்பை மாற்றினார்.

அவரது வார்த்தையில் கூறுவதானால் அவரால், ஆணை பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்ற முடியாது என்பதைத் தவிர, அனைத்து அதிகாரங்களும் இருந்தன. எதிர்கட்சிகள் மிகவும் பலவீனமடைந்த நிலையில் தான் அது சாத்தியப்பட்டது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன மார்க்சிய கட்சிக்கு தலைமை தாங்கவில்லையே! எனவே இங்கு பாராளுமன்ற பெரும்பான்மையை தங்களுடை கட்சி நலனுக்கு பயன்படுத்திக் கொள்ளும் எண்ணத்திற்கு முன்னால் – இடதுசாரி வலதுசாரி என்னும் பாகு பாடுகள் இல்லை. இந்த விடயங்களை சுமந்திரனால் ஆழமாக புரிந்து கொள்ளமுடியாது போயிருக்கலாம்.

சுமந்திரன் ஒரு தமிழ் அரசியல்வாதியாக இந்த விடயத்தை முன்வைத்திருப்பதால் இன்னொரு விடயமும் இந்த இடத்தில் குறுக்கிடுகின்றது. ஒரு வேளை விடுதலைப் புலிகள் இயக்கம் யுத்தத்தில் வெற்றி பெற்று, ஒரு தனிநாடு உருவாகியிருந்தால் அந்த நாட்டில் ஒரு கட்சி இருந்திருக்குமா அல்லது பல கட்சிகள்இருந்திருக்குமா? விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் ஆரம்பத்தில், யூகோஸ்லாவிய வகைப்பட்ட ஒரு கட்சி சர்வாதிகாரம் பற்றி பேசிய பதிவும் உண்டு. இது பல இடங்களில் (14ம் பக்கம் பார்க்க)

# ஈரானின் கதியே கியூபாவுக்கு!

இலங்கைக்கான கியூபா நாட்டின் தூதுவர் பட்றீசியா லசாரா பீகோ குவேரா (Patricia Lazara Pego Guerra) சில நாட்களுக்கு முன்னர் பிரதமர் ஹரிணி அமரசூரியவை சந்தித்து இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக பேச்சுக்களை நடத்தி இருந்தார். அவர் கடந்த மாதம் 3ஆம் திகதி பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி. தலைமையகத்திற்குச் சென்று, கட்சியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டிருந்தது. ஈரான் மீதான அமெரிக்காவின் போர் தீவிரமடைந்த பின்னர் இந்த பேச்சுக்கள் இடம் பெற்றிருந்தன.

ஈரான் மீதான போருக்கும் இந்த பேச்சுக்களுக்கும் எந்த தொடர்புகளும் இல்லை எனக் கூறமுடியாது. கடந்த காலத்தில் ஈரானும் இலங்கையும் எந்த அளவுக்கு நெருக்கமாகவும் இணக்கமாகவும் செயற்பட்டிருந்தனவோ, அதேயளவுக்கு இணக்கமாகவும் நெருக்கமாகவும் செயற்பட்டிருக்கின்ற நாடுகள் தான், இலங்கையும் கியூபாவும்.

இரண்டு நாடுகளுக்கும் இடையே பாரம்பரியமாக நெருங்கிய நல்லுறவு இருந்து வந்திருக்கிறது. சர்வதேச அரங்கில் இலங்கைக்காக கடுமையாக குரல் கொடுத்து வந்த நாடுகளில் ஒன்று கியூபா. போரின் போதும் போருக்கு பின்னரும் இலங்கைக்காக சர்வதேச அரங்கில் கியூபா குரல் கொடுத்தது.

ராஜபக்ஷவினர் ஆட்சியில் இருந்த போதும் சரி, நல்லாட்சி அரசாங்கத்திலும் சரி – கியூபாவின் ஆதரவு வலுவானதாக இருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலும் வேறு சர்வதேச தளங்களிலும் இலங்கை நெருக்கடிகளை எதிர் கொண்டிருந்த போது கியூபா துணை நின்றது. தார்மீக அடிப்படைகளை தாண்டி, கியூபாவின் ஆதரவு இலங்கை அரசாங்கத்துக்கு கிடைத்திருந்தது. இராஜதந்திர ரீதியாக அதற்குப் பலம் கிடைத்திருந்தது. ஈரானும் அவ்வாறே உதவிகளை வழங்கியிருந்தது.

ஆனால் இப்போது ஈரானை இலங்கை அரசாங்கம் கை விட்டு விட்டது என்றே சொல்லலாம். ஈரானுடன் நெருக்கம் காண்பிப்பதை விட, அது அமெரிக்காவை அதிகம் சார்ந்திருக்க விரும்புகிறது. இது இலங்கையின் இராஜதந்திர அணுகுமுறைகளின் முக்கியமான ஒரு மாற்றமாக கருதப்படுகிறது.

ஈரான் மீதான போர் தொடங்கிய நாளிலிருந்து இலங்கையின் இராஜதந்திர அணுகுமுறை தொடர்பான விமர்சனங்கள் நீடித்து வருகின்றன. அதிலும் குறிப்பாக, இலங்கைக்கு அப்பால் உள்ள கடற்பகுதியில், ஈரானிய கடற்படைக் கப்பல் அமெரிக்க நீர்மூழ்கி கப்பலால் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் மற்றும் அதன் தொடர்ச்சியாக இடம்பெற்ற பல விடயங்கள் குறித்து இலங்கை மௌனம் காத்து வருகிறது.

கண்டிக்க வேண்டிய இடங்களில் கண்டிக்கவில்லை, அனுதாபம் தெரிவிக்க வேண்டிய இடங்களில் அனுதாபம் தெரிவிக்கவில்லை, எதிர்க்க வேண்டிய இடத்தில் எதிர்க்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் மீது சுமத்தப்படுகின்றன.

இது வெளியுறவு கொள்கை சார்ந்த மாற்றமாகப் பார்க்கப்படாமல், அரசாங்கத்தின் தந்திரமாக , தப்பிக்கும் உத்தியாக பார்க்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை பகைத்துக் கொள்ளாத ஒரு உத்தியை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுக்கிறது என்ற குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில், இப்போது கியூபா விவகாரம் மேலோங்க தொடங்கியிருக்கிறது.



அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற போதே, அவர் பல திட்டங்களைக் கொண்டிருந்தார். அமெரிக்காவின் எதிரிகளாக நீண்ட காலமாக கருதப்பட்டு வருகின்ற, பல நாடுகளை, அவற்றின் வளங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே அந்தத் திட்டமாகும்.

வர்த்தகர் என்ற வகையில் அவர் தனது வியாபாரத்தை விஸ்தரிப்பதற்கும் வெளிநாடுகளின் மூல வளங்களை கைப்பற்றுவதற்குமே பிரதானமாக திட்டமிட்டார். இஸ்ரேலுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையிலான போர் விடயத்தில் அவர் காஸாவை கைப்பற்றுவதற்கு கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு திட்டங்களை முன் வைத்திருந்தார். அது காஸாவை அபகரிக்கும் ஒரு திட்டமாக கருதப்பட்டது. அடுத்து உக்ரேனுக்கு நெருக்கடி கொடுத்து, அங்குள்ள அரசாங்கத்தை அச்சுறுத்தி, அதன் கனிம வளங்களை அகழ்ந்தெடுக்கும் உரிமையை அபகரித்துக் கொண்டார்.

அதன் பின்னர் அவரது பார்வை திரும்பியது. அங்கு ஆட்சியில் இருந்த நிகோலஸ் மதுரோ இரவோடு இரவாக அமெரிக்க படைகளால் தூக்கிச் செல்லப்பட்டார். அதன் பின்னர் அங்குள்ள எண்ணெய் வளங்களை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை தன் வசப்படுத்தி கொண்டார். இதன் மூலம் ட்ரம்ப் இன்னொரு காயை விழுத்தத் திட்டமிட்டார்.

வெனிசுவேலாவில் இருந்து தான் கியூபாவுக்கு எண்ணெய் கொண்டு செல்லப்பட்டது. கியூபாவின் கம்யூனிச ஆட்சியை வீழ்த்துவதற்கு அமெரிக்கா, ஆறு தசாப்தங்களுக்கு மேலாக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

கியூபாவின் தலைவர் பிடல் காஸ்ட்ரோவை கொலை செய்வதற்கு, சி.ஐ.ஏ. தொடர் முயற்சிகளை மேற்கொண்டது. காஸ்ட்ரோவைக் குறிவைத்து, அமெரிக்காவினால் 634 படுகொலைத் திட்டங்கள் அல்லது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக 2006ஆம் ஆண்டில், கியூபாவின் முன்னாள் புலனாய்வுத் துறைத் தலைவரான பபியான் எஸ்கலான்டே கூறியிருந்தார்.

அவருக்குப் பின்னர் வந்த தலைவர்களையும் அகற்றுவதற்கு அமெரிக்க புலனாய்வு அமைப்புகள் பெரு முயற்சிகளை மேற்கொண்டிருந்தன.

அமெரிக்காவினால் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு நெருக்கடியிலும், கியூபா தாக்குப் பிடிப்பதற்கு ரஷ்யாவின் உதவி மாத்திரமன்றி வெனிசுவேலாவின் எண்ணெய் வளமும் காரணமாக இருந்தது. இதனைத் தாண்டி கியூபாவின் மீது கை வைக்க முடியாத நிலை அமெரிக்காவுக்கு காணப்பட்டது.

கரீபியன் தீவுகளுக்குள் இருக்கும் இலங்கையை விட இரண்டு மடங்கு பெரிதான – சனத்தொகையில் பாதியை விடக் குறைவான கியூபா, புளோரிடா கரையில் இருந்து வெறுமனே 150 கி.மீ தொலைவில் இருந்து கொண்டு அமெரிக்காவுக்கு தண்ணி காட்டிக் கொண்டிருந்தது. இப்போது கியூபாவின் மீது ட்ரம்ப்பின் பார்வை விழுந்திருக்கிறது. ஈரானை அடுத்து கியூபாவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது தான் தனது இலக்கு என்று ட்ரம்ப் பகிரங்கமாகவே அச்சுறுத்துகிறார்.


அவர் ஈரான் போரை முடித்த பின்னர், அடுத்த கட்டமாக கியூபாவின் மீது போர் தொடுக்கவோ அல்லது ஏதேனும் வழிகளில் அதனை கட்டுப்பாட்டில் கொண்டு வரவோ முயற்சிப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. அவருக்குள் இருக்கும் அதிகாரவெறி அத்தகைய முயற்சிகளைத் தூண்டி விடும்.

வெனிசுவேலாவில் இருந்து கடந்த மூன்று மாதங்களாக எரிபொருள் கிடைக்காத நிலையில், கியூபாவில் கடுமையான எரிபொருள், மின்சார, மற்றும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இது கியூப மக்களின் மன உறுதியை குலைக்கின்ற செயற்பாடுகளாக கருதப்படுகிறது.

ரஷ்யாவின் மீதான தடைகள் தளர்த்தப்பட்டதை அடுத்து முதலாவது ரஷ்ய எண்ணெய் தாங்கி கப்பல் சில நாட்களுக்கு முன்னர் தான் ஹவானாவைச் சென்றடைந்தது. கியூபாவைக் குறிவைத்து தாக்குதலுக்கு தயாராகி வருகின்ற நிலையில் தான், கியூபாவின் தூதுவர் இலங்கையின் ஆட்சியாளர்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்த தொடங்கியிருக்கிறார்.

இதன் மூலமாக தன்னை காப்பாற்றிக் கொள்ள முடியும் என கியூபா எதிர்பார்க்கிறது என்று கருதுவதற்கு இடமில்லை. ஆனால், சர்வதேச அளவில் தனக்கு ஆதரவான நாடுகளை அணிதிரட்டும் தேவை அதற்கு இருக்கிறது.

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



அதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

கடந்த காலங்களில் கியூபா யாருக்கு ஆதரவு அளித்ததோ, அவர்களின் ஆதரவை உறுதிப்படுத்த முற்படுகிறது. அந்த வகையில் தான், இலங்கையின் ஆட்சியாளர்களிடமும் கியூபா நெருக்கத்தை ஏற்படுத்த முற்பட்டிருக்கிறது.

ஆனால், இலங்கையின் ஆட்சியாளர்கள் கியூபாவுக்கு ஆதரவாக நிற்பார்கள் என்று நம்ப முடியாது. அவர்கள் இன்று பச்சோந்தியாக இருக்கிறார்கள்.

கடந்த காலத்தில் உதவினார்கள் என்பதற்காக கியூபாவின் பக்கம் நிற்பார்கள் என்று கடைசி வரை எதிர்பார்க்க முடியாது. வெனிசுவேலாவில் இருந்து நிகோலஸ் மதுரோ பிடித்துச் செல்லப்பட்ட போது அதனை அரசாங்கம் எதிர்க்கவில்லை, கண்டிக்கவில்லை.

ஜே.வி.பி. ஓர் அறிக்கையை வெளியிட்டது அவ்வளவு தான். ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் தாக்குதல்களையும் அரசாங்கம் கண்டிக்கவில்லை. அதே போலத் தான், கியூபாவுக்கு என்ன நடந்தாலும் என்ன நேரிட்டாலும், இலங்கை அரசாங்கம் அதற்கு தார்மீக அடிப்படையில் கூட எதிர்ப்பை வெளிப்படுத்தாது.

கியூபா அரசாங்கத்துடன் அது கடைசி வரை நிற்கும் என நம்ப முடியாது. ஏனென்றால் இலங்கையின் தற்போதைய அரசாங்கம் அமெரிக்க சார்பு நிலையையும் அதன் ஆதரவையும் மாத்திரமே கருத்தில் கொள்கிறது.

பாரம்பரிய அரசியல் உறவுகளையும் இராஜதந்திர உத்திகளையும் அது முற்றாக புறக்கணித்து செயற்படுகிறது. நவீன அரசியல் நோக்கில் இது ஒரு பிழைப்பு வாதம். ஆனால் இது எல்லா நேரங்களிலும் இலங்கைக்கு கை கொடுக்கும் என்று கருத முடியாது.

இலங்கையை காப்பாற்றுவதற்கு இதை விட வேறு வழியில்லை என்று ஜே.வி.பி.யின் ஆட்சியாளர்கள் கருதலாம்.


தங்களின் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்கு இது அவசியம் என அவர்கள் நினைக்கலாம். அது உண்மையும் கூட. ஆனால், சர்வதேச அரங்கில் இலங்கையின் இராஜதந்திர அணுகுமுறைகள், உன்னிப்பாக கவனிக்கப்படும்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு நாடுகளுடன் அது எப்படி நடந்து கொள்கிறது என்பது அவதானிக்கப்படும்.

அவ்வாறான பார்வையில் இலங்கை தவறான ஒரு விம்பத்தையே உலகத்திற்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. கியூபாவுக்கு அமெரிக்காவினால் எத்தகைய அச்சுறுத்தல் ஏற்பட்டாலும் கூட, பெலவத்தை ஓர் அறிக்கையோடு நிறுத்திக் கொள்ளும், இலங்கை அரசாங்கம் அமைதியாக இருந்து விடும்.

# போரின் நீண்டு நிலைத்திருக்கும் நிழல்!

கட்டுரையாளர்:
- மீரா ஸ்ரீனிவாசன் -



இலங்கையில் உள்நாட்டுப் போரின் போதும் அதற்குப் பின்னரும் நிகழ்ந்த பாலியல் வன்முறைகள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் (OHCHR) இந்த வருடத்தின் தொடக்கத்தில் வெளியிட்ட புதிய அறிக்கை போரின் மிகவும் அதிர்ச்சிகரமான விளைவுகளில் ஒன்றின் மீது கவனத்தை ஈர்க்கச் செய்திருக்கிறது.



2009ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்த அந்தப் போரில் தப்பிப்பிழைத்த பலர் இன்னனும் தீராத உடல் காயங்கள், மலட்டுத்தன்மை, உளவியல் பிரச்சினைகள் மற்றும் தற்கொலை எண்ணங்களால் பாதிக்கப்படுகின்றனர் என்று அந்த அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது.

இலங்கையிலிருந்து நான் செய்திகளை வழங்கிய அனுபவம் எனக்கு மீண்டும் மீண்டும் கற்பித்த ஒரு விடயம், ஒரு போரை அத்தனை எளிதாக நாம் கடந்து சென்றுவிட முடியாது. அது தப்பிப் பிழைத்தவர்களின் உடல்களிலும் மனங்களிலும் வாழ்கிறது; அவர்கள் குணமடைய போராடும் ஒவ்வொரு நாளும் அவர்களின் நினைவுகளில் அது மீண்டும் மீண்டும் மேலெழுகிறது என்பதேயாகும்.

ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடுத்திருக்கும் சட்டவிரோதப் போர் மற்றும் ஈரானின் பதிலடித் தாக்குதல்கள் தொடர்பான தினசரி செய்திகளை அவதானிக்க நாம் சிரமப்படுகின்ற வேளையில், ஒன்று மட்டும் நிச்சயம் இந்த உலகம் முழுவதுமே போரின் முடிவின் செய்திக்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறது.

வளைகுடா நாடுகளில் சிக்கித் தவிக்கும் புலம் பெயர் தொழிலாளர்கள் முதல், எரிபொருள் அல்லது எரிவாயுவை வாங்குவதற்கு வசதியற்ற குடும்பங்கள், மின்சாரக் கட்டணத்தை திடீரென உயர்த்த நிர்ப்பந்திக்கப்படுகின்ற அளவுக்கு பாரிய நிதி நெருக்கடியில் உள்ள அரசாங்கங்கள் வரை என நம் அனைவரினதும் நலன்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றது. அதிகார வெறி கொண்ட இரு மனிதர்களின் விருப்பத்தால் தொடங்கப்பட்ட ஒரு போரிலிருந்து அனைவரும் விரைவான நிம்மதியை எதிர்பார்க்கிறார்கள்.

மேற்கு ஆசியாவில் பெப்ரவரி 28 ஆம் திகதி அமெரிக்கா–இஸ்ரேல் கூட்டணியின் வான் வழித் தாக்குதலுடன் தொடங்கிய தற்போதைய மோதல் ஒரு மாதத்தைக் கடந்து விட்டது. இது நம் காலத்தின் பல போர்களில் ஒன்று.

2022 ஆம் ஆண்டில் ரஷ்யாவின் ஊடுருவலையடுத்து தொடங்கிய உக்ரைன் போர் இந்த ஆண்டு பெப்ரவரியில் ஐந்தாவது ஆண்டில் கால்பதித்தது. இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக காசாவில் பாலஸ்தீனியர்களைக் கொல்வதை இஸ்ரேல் நிறுத்தவில்லை அங்கு பலியானவர்களின் எண்ணிக்கை 75 ஆயிரத்தைத் தாண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அதேவேளை மேற்குக் கரையில் இஸ்ரேலிய குடியேறிகள் பாலஸ்தீனர்களுக்கு எதிரான வன்முறைத் தாக்குதல்களைத் தொடர்கின்றனர்.

மேலும் இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாக மோதலில் சிக்கியிருக்கும் சூடான், ஒரு பாரதூரமான மனிதாபிமானப் பேரழிவை எதிர்நோக்கி நிற்கிறது. இந்த ஆண்டு அங்கு 3 கோடி 37. இலட்சம் மக்களுக்கு உதவி தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

நேரடியாக நடக்கும் ஒரு போரின் தகவல்கள் இயல்பாகவே நம் கவனத்தை ஈர்க்கின்றன. அவை வாழ்வா சாவா என்பது பற்றியவை என்பதால் அவசரமானவையாகத் தோன்றுகின்றன. இரக்கமற்ற தலைவர்கள் தங்கள் அதிகாரத்தை கொலை செய்வதற்கான உரிமமாக தவறாகக் கருதும்போது, உலகம் உண்மையிலேயே ஆபத்தான இடமாக மாறுகிறது. இது வெகு தொலைவில் இருக்கும் நம்மைக் கூட பதற்றத்துடன் தகவல்களைத் தேடியறிய வைக்கிறது.

தற்போது நடந்து வரும் போர்கள் நிறுத்தப்பட வேண்டும். போர்க்களத்தில் ஒரு போர் முடிவுக்கு வருவது என்பது வலிமிகுந்த, சவாலான, பெரும்பாலும் குழப்பமான ஒரு மீட்சிப் பாதையின் ஆரம்பம் டுமே என்பதை நாம் உணரும்போது, அதன் அவசரம் இன்னும் அதிகமாகிறது.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை வெறும் எண்களாகச் சுருக்குவது, போரின் அழிவையோ அல்லது வன்முறை ஏற்படுத்தும் நீண்டகால பாதிப்பையோ முழுமையாக வெளிப்படுத்துவதில்லை. இலங்கையில் அரசாங்கப் படைகளுக்கும் தமிழீழ விடுதலை புலிகளுக்கும் இடையிலான உள்நாட்டுப் போர் முடிவடைந்து அடுத்த மாதத்துடன் 17 ஆண்டுகள் நிறைவடைகின்றன

இலங்கை சுமார் மூன்று தசாப்தங்களாக போரை எதிர்கொண்டது. போரின் பாதிப்பை அதிகம் சுமந்த தமிழர்கள், குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளவர்கள், போர் முடிந்திருக்கலாம், ஆனால் இன்னும் முரண்பாடுகள் தீரவில்லை' என்று கூறியவண்ணம் இருக்கிறார்கள். அது அகலாத துயரமாகவும், மன உளைச்சலாகவும், இராணுவத்திடமிருந்து தங்கள் நிலங்களை மீட்டெடுப்பதற்கான போராட்டமாகவும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் அன்புக்குரியவர்களைத் தேடும் தொடர் முயற்சியாகவும் சிதைந்த பொருளாதாரத்தில் உயிர் வாழ்வதற்கான போராட்டமாகவும், தங்களுக்குத் தாங்களே ஒரு எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ள முடியுமா என்ற அச்சமாகவும் வெளிப்படுகிறது.

நாடற்றவர்களாக மாற்றப்பட்டு, கண்ணியம் பறிக்கப்பட்ட ஒரு அகதியின் வாழ்வில் போர் என்பது கடந்த கால நிகழ்வு அல்ல் அது நிகழ்காலத்தின் ஒரு தொடர்ச்சியான கருப்பொருள். தப்பிப் பிழைத்தவர்கள் உயிருடன் இருப்பதற்காக நன்றியுடையவர்களாக இருக்கலாம், ஆனால் அவர்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தப்படுவதையோ அல்லது அதற்கும் மேலாக, மனிதர்களாகக் கூட மதிக்கப்படாத நிலையையோ எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

கொழும்பில் எனக்கு முன்னர் 'தி இந்து'வுக்காக பணியாற்றிய செய்தியாளர்கள் 1980 களில் இலங்கை உள்நாட்டுப் போரைச் செய்தியாக்கத் தொடங்கினர். நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகும் நானும் அதைச் செய்தியாக்குவதை நிறுத்தவில்லை.

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்ட இறுதிப் போர் நடந்த இடமான முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கலைஞர் சுந்தரம் அனோஜன் சமீபத்தில் 'தி இந்து' நாளிதழுக்கு அளித்த பேட்டியில் 'எனது வாழ்க்கையை நான் போருக்கு முன்னரானதாகவும் பின்னரானதாகவும் இரண்டு கட்டங்களாகப் பார்க்கிறேன்.' என்று குறிப்பிட்டார்.

ஒரு போர் வாழ்க்கையை நிரந்தரமாக மாற்றியமைக்கிறது. அது பேரழிவின் தடயங்களை விட்டுச் செல்கிறது. அதன் பின்விளைவுகள் தப்பிப் பிழைத்தவர்களை நீண்ட காலத்திற்கு அச்சுறுத்துகின்றன. போர் என்பது ஒன்றும் காணொளி விளையாட்டு (Video game) அல்ல.

# ஜே.வி.பி. ஒரு கட்சி ஆட்சியை நோக்கி நகர்கின்றதா?

(12ம் பக்கத் தொடர்ச்சி) பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அதே வேளை புரட்சிகர சோசலிசம் பற்றியும் அவர் பேசியிருக்கின்றார். பொதுவாக ஒரு ஆயுதப் போராட்டத்தில் வெற்றி பெற்றால் அதன் பின்னரான ஆட்சியென்பது பெரும்பாலும் அவர்களுடைய ஏகபோகமாகத் தான் இருக்கும். ஜே.வி.பியும் விடுதலைப்புலிகளும் அடிப்படையில் ஒரு கட்சி அல்லது ஒரு இயக்க மேலாதிக்க சிந்தனையினால் வழி நடத்தப்பட்டவர்கள் தான். இந்தப் பின்புலத்தில் நோக்கினால், இலங்கைத்தீவில் தோன்றிய இரண்டு பக்க ஆயுதக் கிளர்ச்சி இயக்கங்களுமே ஜனநாயக அடிப்படையைக் கொண்டவர்கள் அல்லர் – ஆயுத வழிமுறையின் வெற்றி எப்போதும் பல்கட்சிக்கான கதவை இழுத்து மூடிவிடும்.

ஆனால் ஜே.வி.பியின் கடந்த காலத்தைக் கொண்டு அவர்களது இன்றைய ஜனநாயக அரசியலை எடைபோட முடியாது. ஒரு வேளை எதிர்கட்சிகள் பலவீனமாக இருக்கக் கூடிய ஒரு அரசியல் சூழலில் தான், அவர்களது கனவுத் திட்டங்களை மேற்கொள்ள முடியுமென்று அவர்கள் நம்பினால், அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புண்டு. ஆனால் வடக்கு கிழக்கில் அவர்களது அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த நாடு முழுவதும் அதனை பயிற்சி செய்வார்கள் என்று கருத முடியாது.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் மனதை வெற்றி கொண்டால் அதிகாரப் பகிர்விற்கான தேவையை இல்லாமலாக்கி விடலாம் என்று அவர்கள் எண்ண வாய்ப்புண்டு. ஒரு அரசியல் கட்சி என்னும் வகையில், அதற்கான முயற்சிகளை அவர்கள் செய்யாமல் இருக்க வேண்டுமென்று, தமிழ் கட்சிகள் எதிர்பார்க்க முடியாது. அதில் அவர்கள் வெற்றிபெற்றால் அது அவர்களின் கெட்டித்தனம் அதனை தடுத்து நிறுத்தி, தமிழ் மக்களை தங்களின் பக்கமாக அணி திரட்டுவது தமிழ் கட்சிகளின் வல்லமை.

# யார் குற்றினால் அரிசியாகும்? யார் குற்றினால் மண்ணாகும்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது கிட்டத்தட்ட 20பேர் கலந்து கொண்ட அந்தச் சந்திப்பில் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் ஒரு நிலைப்பாட்டுக்குக் கொண்டு வருவது பற்றி ஆலோசிக்கப்பட்டது.



சந்திப்பை ஒழுங்குபடுத்தியது யாழ். ஊடக அமையம் இச்சந்திப்பில் அரசியல் மற்றும் சிவில் நடவடிக்கைகளில் ஈடுபடும் செயற்பாட்டாளர்களும் ஊடக வியலாளர்களும் கலந்து கொண்டார்கள்.

கடந்த சுமார் ஒரு மாத காலப் பகுதிக்குள் இனப்பிரச்சனைக்கான தீர்வை நோக்கி கட்சிகளை ஒருங்கிணைக்கும் நோக்கத்தோடு எடுக்கப்பட்ட மூன்றாவது நகர்வு இதுவாகும். ஏற்கனவே கொழும்பு தமிழ்ச் சட்டத்தரணிகள் அமைப்பு அவ்வாறான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. அதன்பின் தமிழ் ஆயர்களின் அமைப்பு அப்படி ஒரு முயற்சியில் ஈடுபடப் போவதாக அறிவித்திருக்கிறது. அது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு கடந்த வாரம் வெளிவந்தது. இப்பொழுது யாழ் ஊடக அமையம் அவ்வாறான ஒரு முயற்சியில் ஈடுபடப் போவதாக அறிவித்திருக்கிறது.

சட்டத்தரணிகள் சங்கத்தின் முயற்சிக்குப் பின்னால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஈடுபாடு இருக்கலாம் என்று சந்தேகிக்க இடம் உண்டு. சட்டத்தரணிகள் சங்கத்தில் பிரதான பொறுப்புகளில் இருப்பவர்கள் அல்லது தீவிரமாக செயல்படு கிறவர்கள் பெரும்பாலானவர்கள் ஏற்கனவே முன்னணிக்கு நெருக்கமாகக் காணப்படுகின்ற சிவில் சமூகங்களுக்கு நெருக்கமாகக் காணப்பட்டவர்கள். எனினும் இந்த முயற்சிக்கு, தான் முழுமையாக ஆதரவு தரப் போவதாக சுமந்திரன் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த ஊடகச் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

கடந்த வார இறுதியில் தமிழரசுக் கட்சிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் ஒரு சந்திப்பு இடம்பெற்றது. இரண்டு கட்சிகளுக்கும் இடையிலான வழமையான மாதாந்தச் சந்திப்பு அது என்று கூறப்பட்டது.சந்திப்பின் முடிவில் நடந்த ஊடகச் சந்திப்பிலேயே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். அதாவது சட்டத்தரணிகள் அமைப்பின் செயற்பாட்டுக்கு தாங்கள் முழுமையான ஒத்துழைப்பைத் தரப் போவதாகவும் இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பில் ஒரு பொது நிலைப்பாட்டை அடைவதற்காக தமிழரசுக் கட்சி உழைக்கும் என்பதையும் அவருடைய பதிலிலிருந்து விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

மேலும் சட்டத்தரணிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் தரும் தகவல்களின்படி சுமந்திரன் இந்த விடயத்தில் ஆர்வமாக இருப்பதாகவும் அவர்களுக்கு எந்த விதமான தடையுமின்றி ஒத்துழைப்பதாகவும் தெரிகிறது. அதே சமயம் சட்டத்தரணிகளின் முயற்சிக்கு ஆதரவாக முன்னணியில் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையும் ஒரு பொது ஆவணத்தைத் தயாரிக்கும் வேலைகளில் ஈடுபட்டு வருகிறது. ஏற்கனவே சில கிழமைகளுக்கு முன் நடந்த இளங் கலைஞர் மன்றச் சந்திப்பின் போது குழு ஒன்று உருவாக்கப்பட்டது. அந்த குழுவுக்குள் அரசியல்வாதிகள் அரசியல் செயற்பாட்டாளர்கள் அரசியல் விமர்சகர்கள், அறிவுஜீவிகள், ஊடகவியலாளர்கள் போன்றவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். அந்தக் கட்டமைப்பு விரைவில் ஒரு பொது ஆவணத்தைத் தயாரிப்பதற்கான வேலைகளில் இறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்படிப்பட்டதோர் பின்னணிக்குள் தான் ஆயர்களும் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் இறங்குவதற்கு ஆர்வமாகக் காணப்படுகிறார்கள். இப்பொழுது யாழ் ஊடக அமையம் அந்த வேலைகளில் இறங்கியிருக்கிறது.

இந்த நகர்வுகள் தன்னியல்பாக முன்னெடுக்கப்படுகின்றவையா? அல்லது இவற்றின் பின்னணியில் யாராவது இருக்கிறார்களா என்று தமிழ்ப் பொது மனம் சந்தேகிக்கும்.அந்தச் சந்தேகம் தவிர்க்க முடியாதது. ஏனென்றால் சட்டத்தரணிகள் பேரவையின் முயற்சிகளின் பின்னணியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இருக்கலாம் என்று பொதுவாக ஊகிக்கப்படுகின்றது. அதனால் ஆயர்களின் சங்கம் மற்றும் யாழ்.ஊடக அமையும் என்பவற்றின் பின்னணியில் யாராவது உண்டா என்ற சந்தேகம் இயல்பாகவே தோன்றும்.கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த சந்திப்பின் பின் யாழ்.ஊடக அமையம் வெளியிட்ட அறிக்கையின் மொழிநடை அந்தச் சந்தேகத்தை அதிகப்படுத்துவது.

யாரும் பின்னணியில் இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் தமிழ் அரசியல் சக்தியை ஒருங்கிணைக்க வேண்டும் என்பது அவசியம். அதுவும் அரசாங்கம் ஒரு புதிய யாப்பை உருவாக்க முயற்சித்தால் – கவனிக்கவும் முயற்சித்தால் – தமிழ் மக்கள் அதை எதிர்கொள்ளத் தேவையான தயாரிப்புகளோடு காணப்பட வேண்டும்.

இந்த அடிப்படையில் தற்போது லண்டனில் இருந்து செய்யப்படும் புலம் பெயர்ந்த தமிழ்ச்செயற்பாட்டாளர் ஒருவரின் ஊக்குவிப்போடு முன்னெடுக்கப்படுகின்ற திருமலைப் பிரகடனமும் அதன் பின்னரான கருத்தரங்குகளும் அவசியமானவை. மேற்படி புலம்பெயர்ந்த தமிழ்ச் செயல்பாட்டாளர் அப்படி ஒரு பொது ஆவணத்தைத் தயாரிப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் அந்த ஆவணம் இனப் பிரச்சினைக்கான தீர்வை காணும் நோக்கத்தை பிரதானமாக கொண்டிருக்க வேண்டும். அதாவது புதிய யாப்பை நோக்கி அந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டால் நல்லது. மாறாக முன்னணிக்கு ஆப்பு வைப்பது என்று சிந்தித்துச் செயற்படாமல் இருந்தால் சரி. திருமலைப் பிரகடனம் தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் நடந்து கொண்டிருக்கும் பின்னணியில் சட்டத்தரணிகள் அமைப்பு ஒருங்கிணைப்பு முயற்சிகளைக் கையில் எடுத்தது. சட்டத்தரணிகள் அமைப்பு கட்சித் தலைவர்களை அழைத்து முதலாவது சந்திப்பை நடத்தியிருந்த பின்னணிக்குள், தமிழ் ஆயர்கள் சங்கம் அந்த முயற்சியில் இறங்கப் போவதாக அறிவித்திருக்கிறது. ஆயர்கள் சங்கத்தின் அறிவிப்பு ஊடகங்களில் வெளிவந்திருந்த ஒரு பின்னணிக்குள் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.ஊடக அமையும் இந்த விடயத்தைக் கையில் எடுத்திருக்கிறது.

ஒரு புதிய யாப்பை நோக்கி மட்டுமல்ல. வரக்கூடிய மாகாண சபைத் தேர்தலை நோக்கியும் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒருங்கிணைப்பது நல்லது .பல்வேறு தரப்புக்களும் தங்கள் சக்தியைப் பிரயோகித்து கட்சிகளை ஒரு மேசைக்குக் கொண்டுவர முடிந்தால் அது மிகவும் நல்லது. ஆனால் இந்த முயற்சிகள் தங்களுக்கு இடையே பொருத்தமான நடைமுறைச் சாத்தியமான ஒருங்கிணைப்பைக் கொண்டிருக்க வேண்டும்.இந்த விடயத்தில் யார் குத்தினாலும் அரிசியானால் சரி என்று கூறிக்கொண்டிருக்க முடியாது. ஏனென்றால் இப்பொழுது நான்கு உரல்களில் நான்கு விதமாக அரிசி குத்தப்படுகிறது. இதில் ஒரு உரல், தான் குத்துவது தான் அரிசியாக வரும் அடுத்தவர் குத்துவது மண்ணாக வரும் என்று கூறாமல் இருக்க வேண்டும்.

அரசாங்கம் ஒரு புதிய யாப்பைக் கொண்டு வருமா என்பது சந்தேகந் தான். சில சமயம் அரசாங்கம் அந்த முயற்சியைத் தொடங்கலாம். ஆனால் அதை இழுத்திழுத்துக் கொண்டு போய் ஒன்றில் தனது ஆட்சியின் இறுதிக்கட்டத்தில் அதை முடக்கி விடலாம். அல்லது அடுத்த முறையும் ஆட்சி செய்ய வேண்டும் என்று கருதினால் அதை மேலும் ஒத்தி வைக்கலாம். டித்வா புயல் மேற்காசியப் போர் போன்றவற்றின் பின்னணியில், பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் தடங்கல்களுக்கு உள்ளாகியுள்ளன. போரை ஒரு காரணமாக முன்வைத்து அரசாங்கம் யாப்புருவாக்க முயற்சிகளை ஒத்திப் போடும் வாய்ப்புகள் உண்டு. யாப்புருவாக்க முயற்சி என்பது ஒரு வாழ்வா சாவா பிரச்சினை. அதில் இப்பொழுது கையை வைத்து தனது இரண்டாவது ஆட்சிக் காலத்தை இழப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்குமா?

ஆனால் மாகாண சபை தேர்தல்களை அரசாங்கம் விரைந்து நடத்தக்கூடும். ஏனென்றால் இந்தியாவை சந்தோஷப்படுத்த வேண்டும். இப்பொழுது மேற்காசியப் போரின் பின்னணியிலும் இந்தியா அரசாங்கத்துக்கு அதிகம் உறுதுணையாக இருந்து வருகிறது. எனவே இந்தியாவைத் திருப்திப்படுத்தும் நோக்கத்தோடு மாகாண சபைத் தேர்தலை வைக்க வேண்டி வரலாம். அப்படி நடந்தால் அத்தேர்தலை தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்கொள்ளத் தவறினால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த விளைவுகள் தான் கிடைக்கக்கூடும்.

அதாவது தமிழ்க் கட்சிகள் ஆளுக்காள் வாக்குகளைப் பங்கிடடால், தமிழ் வாக்குப் பலம் சிதறடிக்கப்படலாம். மாகாண நிர்வாகத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பது சவால்கள் மிகுந்ததாக மாறலாம்.

மாகாண சபைத் தேர்தலில் அவ்வாறு வாக்குச் சிதறும் வாய்ப்புகள் அதிகரித்தால் அது அரசாங்கத்துக்கு அனுகூலமாக அமையும். நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்தது போல ஒரு ஆணை அங்கு கிடைக்குமாக இருந்தால் அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்மக்கள் தனக்கும் ஆணை வழங்கியிருப்பதாகக் கூறும்.

எனவே மாகாண சபைத் தேர்தல்களை எதிர்கொள்வதற்கான ஒருமைப்பாடும் அவசியம்.அந்த ஒருமைப்பாட்டை அடுத்த கட்டமாக யாப்புருவாக்க முயற்சியை நோக்கியும் திருப்பலாம். எதைச் செய்தாலும் எல்லாருமாகச் சேர்ந்து ஒரே பெரிய உரலுக்குள் அரிசியைப் போட்டு இடிப்பதுதான் தமிழ் மக்களுக்கு நல்லது. கட்சிகளுக்கும் நல்லது.

# பரீட்சை முடிவுகளும் ஆசிரியர்களின் வோல்டேஜ்ம்

பரீட்சை முடிவுகள் வெளிவந்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில். சில வாரங்களுக்கு முன்னதாக ஈழத்தமிழ் சமூக வலைத்தளங்களில் ஆங்காங்கே விவாதிக்கப்பட்ட ஒரு காணொளியை இங்கு குறிப்பிட வேண்டும். இக்காணொளி வெளிவந்து இரண்டு ஆண்டுகள் காணொளியில் பேசியிருப்பவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர். ஜெயந்தஸ்ரீ. அவர் சில ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார். இங்கு அவர் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஊக்கமூட்டும் உரைகளை ஆற்றியிருக்கிறார். தன்னுடைய யாழ் விஜயத்தின் விளைவாக அவர் பெற்றுக் கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் தமிழ்நாடு கோவையில் ஓரிடத்தில் உரையாற்றும் போது அவர் "யாழ்ப்பாணத்து ஆசிரியர்களுக்கு வோல்டேஜ் குறைவு என்று கூறியிருக்கிறார். அதைக் குறித்து யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையைச் சேர்ந்த ஒரு விரிவுரையாளர் அவரிடம் கேள்வி கேட்கிறார். அந்தக் கேள்விக்கு ஜெயந்தஸ்ரீ கூறும் பதில் அக்காணொளியில் உண்டு.




தனது உரையில் ஜெயந்தஸ்ரீ வோல்டேஜ் என்று தான் கருதுவது அறிவு ரீதியான வோல்டேஜ் மற்றும் மொழி அறிவு ஆகிய இரண்டையும் என்று கூறுகிறார். அதாவது தொடர்ச்சியாக வாசிப்பதன் மூலம் பரந்து பட்ட தளத்தில் தமது அறிவையும் மொழி அறிவையும் ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் கூறுகிறார். மேலும் "உங்கள் பிள்ளைகளை படித்த ஆசிரியர்களிடம் அனுப்பாமல் படித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களிடம் அனுப்புங்கள் என்றும் கூறுகிறார். அதாவது தன்னைத் தானே அப்டேட் செய்து கொள்ளும் ஆசிரியரிடம் அனுப்ப வேண்டும் என்று கூறுகிறார்.

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளி வந்திருக்கும் இக்கால கட்டத்தில் தமிழ்ப் பகுதிகளில் பிள்ளைகள் பெற்ற வெற்றிகளைத் தொகுத்துப் பார்க்கும் போது ஆசிரியர்களின் வோல்டேஜ் கவலைப்படும் அளவுக்குக் குறையவில்லை என்று எடுத்துக் கொள்ளலாமாஅல்லது அது பொருத்தமான வோல்டேஜ்ஜா என்று கேட்கலாமா?

நாட்டில் நடப்பில் இருப்பது ஒரு பரீட்சைமையக் கல்விமுறை தேசிய அளவிலான போட்டிப் பரீட்சைகளை நோக்கி பிள்ளைகளைத் தயார்படுத்த வேண்டும். அதைப் பிள்ளைகள் மற்றும் பெற்றோரின் பிரயோக உளவியல் அர்த்தத்தில் சொன்னால் பந்தயக் குதிரைகளை பந்தயத்திற்குப் பழக்கி எடுக்க வேண்டும். இவ்வாறு பந்தயக் குதிரைகளை பழக்குவதற்கு தேவையான வோல்டேஜ்ஜும் பேராசிரியர் கூறும் வோல்டேஜ்ஜும் ஒன்று தானா? இந்தியாவின் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஒரு கவிஞருடைய நேர் காணலை பல ஆண்டுகளுக்கு முன்னுக்கு வாசித்த ஞாபகம். அவருடைய பெயர் மறந்து விட்டது. அவர் ஒரு கவிஞரும் ஆசிரியரும் ஆவார். அவரை நேர்கண்டவர் கேட்கிறார். நீங்கள் ஆசிரியராக இருக்க விரும்புகிறீர்களா அல்லது கவிஞராக இருக்க விரும்புகிறீர்களா? என்று. அதற்கு அவர் பின்வரும் பொருள்பட பதில் கூறுகிறார். ஆசிரியராக இருப்பது என்பது தனக்குத் தெரிந்ததை பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்துவதற்காக. ஏனைய பல விடயங்களும் தனக்குத் தெரியும் என்பது போல ஒரு தோற்றத்தைக் காட்டுவது. ஆனால் கவிஞராக இருப்பது என்பது இயல்பானது.எனக்கு எது தெரியும் தெரியாது என்ற அவஸ்தை இன்றி இயல்பாக இருப்பது எனக்கு தோன்றுவதைக் கூறுவது. எழுதுவது. எனவே நான் இயல்பாக இருப்பது என்ற அடிப்படையில் ஒரு கவிஞராக இருப்பதைத் தான் அதிகமாக விரும்புகிறேன் என்று. ஆனால் பேராசிரியர் சிவத்தம்பி கூறுவார் தெரியாததை தெரியாது என்று சொன்னால் தான் தெரிந்ததைச் சொல்லும் போது நம்புவார்கள் என்று.

பிள்ளைகளை ஆகர்சிக்கவும் அவர்களுடைய அகத்தைத் தூண்டவும் உயர்ந்த இலட்சியங்களை நோக்கி ஊக்கப்படுத்தவும் ஆசிரியர் பரந்துபட்ட அறிவைக் கொண்டிருக்க வேண்டும். ஜெயந்தஸ்ரீ கூறுவது போல சார்ஜ் அதிகமாக இருக்க வேண்டும். ஆனால் இங்கு பிரச்சனை என்னவென்றால், இலங்கை போன்ற நாடுகளில் பரீட்சை மைய போட்டிக் கல்விச் சூழலுக்குள் ஆசிரியர்கள் பரிட்சையை நோக்கித் தான் பிள்ளைகளை தயார்படுத்துவார்கள். பந்தயக் குதிரைகளை தயார்படுத்துவது போல.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இருந்து இந்தப் பந்தயம் தொடங்குகிறது. எனவே பந்தயக் குதிரைகளைத் தயார்படுத்தும் ஓர் ஆசிரியர் அந்தக்குதிரையை பரீட்சையை நோக்கித் தான் பயிறுவிக்கலாம். அதற்கு வெளியே போனால், சிறுவர் வகுப்புகளில் பெற்றோர் அதை அனுமதிப்பார்களா? அல்லது வளர்ந்த பிள்ளைகளின் வகுப்புக்களில் பிள்ளைகள் அது பாடத் திட்டதுக்கு வெளியே போகிறது என்று கருதினால்? தனது கற்றல் வேளை வீணாக்கப்படுகிறது என்று முறைப்பாடு செய்தால்?

அது மட்டுமல்ல பந்தயக் குதிரைகளை அதிகம் பயிற்றுவிப்பது தனியார் கல்வி நிறுவனங்கள் தான். தேசிய பரீட்சைகளில் போட்டியிடும் பந்தயக் குதிரைகள் பெருமளவுக்கு தனியார் கல்வி நிறுவனங்களில்தான் தங்கியிருக்கிறார்கள். ஒப்பீட்டளவில் குறைந்த அளவுக்கே பாடசாலைகளில் தங்கியிருக்கிறார்கள். சில பாடசாலைகளில் மிக அரிதான புறநடைகள் உண்டு. அங்கெல்லாம் சில ஆசிரியர்கள் பந்தயக் குதிரைகளை முழுமையாகப் பொறுப்பெடுத்து பரீட்சைகளுக்குத் தயார்படுத்துகிறார்கள். தங்களிடம் படிக்கும் பிள்ளைகளை தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அவர்கள் அனுமதிப்பதில்லை. அதை ஒரு தவம் போல அவர்கள் கடைப் பிடிக்கிறார்கள் ஆனால் அது ஒரு பொதுவான தோற்றப்பாடு அல்ல. இந்த ஆசிரியர்களும் கூட எந்தவகை வோல்டேஜ்ஜை கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வி இங்கு முக்கியம். ஏனென்றால் நாட்டின் கல்வி முறைமை எதுவோ அதற்கு வேண்டிய வோல்டேஜ்ஜைத் தான் கல்விக் கட்டமைப்பு ஆசிரியர்களிடம் எதிர் பார்க்கும். அது போலவே மாணவர்களும் பெற்றோர்களும் அதாவது பந்தயக் குதிரைகளும் அவற்றின் பெற்றோரும் அந்த வால்டேஜ்ஜைக் கொண்டிருக்கும் ஆசிரியரைத் தான் தேடிப் போவார்கள். இங்கே எது பொருத்தமான வால்ட்டேஜ் என்பதனை கல்வியின் பிரயோக நோக்கந்தான் தீர்மானிக்கிறது. அதைமீறி ஆசிரியர்களால் அதைத் தீர்மானிக்க முடியுமா?

பரீட்சை மைய போட்டிக் கல்வியில் கரணம் தப்பினால் மரணம் என்று வாழ்க்கை வெறுத்துப் படிக்கும் பிள்ளைகள் பந்தயத்தில் எப்படி ஜெயிப்பது என்றுதான் சிந்திப்பார்களே தவிர ஒரு முழுமனிதப் பிறவியாக தமது ஆளுமையை முழுமையாகக் கட்டியெழுப்பும் விடயங்களைக் குறித்து சிந்திப்பதற்கு அவர்களுக்கு நேரம் உண்டா? அவ்வாறு சிந்திப்பதற்கு கல்விமுறையும் பெற்றோரும் அவர்களை விடுவார்களா? இதில் விதிவிலக்கான பெற்றோரும் பிள்ளைகளும் உண்டு. அசாதாரணமான பிள்ளைகளும் உண்டு. அவர்கள் ஒரே சமயத்தில் பந்தயத்திலும் ஜெயிக்கிறார்கள் வாழ்க்கைக்குத் தேவையான ஏனைய அறிவையும் திரட்டிக் கொள்கிறார்கள். ஆனால் இது ஒரு பொதுப் போக்கு அல்ல. இப்படிப்பட்டதோர் கல்விச் சூழலுக்குள் பந்தயக் குதிரைகளைப் பயிற்று விப்பதற்கும் குதிரைகளின் முழுமையான ஆளுமையைச் செதுக்குவதற்குமிடையில் ஏதோ ஒரு சமநிலையைக் கண்டு பிடிக்க வேண்டும்.

பாடசாலைகள் தான் முழு மனித ஆளுமையைச் செதுக்கத் தேவையான வாய்ப்புகளையும் வளங்களையும் கொண்டிருக்கின்றன. தனியார் கல்வி நிறுவனங்கள் அல்ல. தனியார் கல்வி நிறுவனங்கள் பெருமளவுக்கு வணிக நோக்கங்களைக் கொண்டவை. அங்கே குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்தயக் குதிரைகளைப் பழக்கி எடுக்க வேண்டும். அங்கே நோக்கம் பந்தயம் தான். ஆனால் பாடசாலையின் நோக்கம் அதுவல்ல. ஆனால் துயரம் என்னவென்றால் போட்டிக் கல்வி முறைமையானது பாடசாலைகளின் மதிப்பை பெருமளவுக்கு குறைத்து விட்டது.

அதாவது ஆசிரியர்கள் பந்தயக் குதிரைகளைப் பழக்கும் பயிற்றுவிப்பாளர்களாகத் தான் பார்க்கப்படுகிறார்கள். கல்விமுறையின் தேவை அப்படித்தான் உள்ளது. மாறாக பரந்த தளத்தில் தனது அறிவைக் கட்டியெழுப்பி தன்னை எப்பொழுதும் அப்டேட் செய்துகொண்டு தனது வோல்டேஜ்ஜை உயர்வாக வைத்திருக்கும் ஆசிரியர்களுக்கு இந்தக் கல்வி முறையில் எவ்வளவு தேவை உண்டு?

தமது பிள்ளைகள் தம்மைப் போலவே ஆசிரியர்களாக வர வேண்டும் என்று ஏன் பெரும்பாலான ஆசிரியர்கள் விரும்புவதில்லை? போட்டிக் கல்வி முறைமைக்குள் ஆசிரியருக்குள்ள மதிப்பு குறைந்து போய் விட்டது காரணமா? அல்லது சில தனியார் கல்வி நிறுவனங்களில் வெற்றி பெற்ற. கோடீஸ்வரர்களாக உள்ள ஆசிரியர்களை விட ஏனைய பெரும்பாலான ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் போதாது என்பதனாலா? தன் பிள்ளை தன்னைப் போல ஆசிரியராக வர வேண்டும் என்று கனவு காணும் ஆசிரியர்களை அதிகமாகக் கொண்டிராத ஒரு கல்வி முறைமைக்குள் எது சரியான வால்ட்டேஜ்?

இப்படிப்பட்டதோர் கல்விச் சூழலில் கடந்த வாரம் வெளிவந்த பரீட்சை முடிவுகளில் சில அரிதான புறநடைகளைத் தவிர பெரும்பாலான வெற்றிகளுக்கு தனியார் கல்வி நிறுவனங்களும் காரணம். இதில் ஆசிரியரின் வோல்டேஜ் என்பது எது என்பதை போட்டிக் கல்விச்சூழல் தான் தீர்மானிக்கின்றது. பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தொகுத்துப் பார்த்தால் நமது ஆசிரியர்களின் வோல்ட்டேஜ் கவலைப்படுமளவுக்குக் குறையவில்லை என்று தான் எடுத்துக் கொள்ளப்படும். போட்டிப் பரீட்சை தான் பிரதான இலக்கு என்றால் நமது ஆசிரியர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். கல்வி முறைமையில் மாற்றத்தைச் செய்துவிட்டு புதிய அளவு கோல்களுடன் வரலாம்.

நாட்டை இப்பொழுது ஆட்சி செய்வது மாற்றத்தை வாக்களித்து வந்த ஓர் அரசாங்கம். அதில் பிரதமராகவும் கல்வி மந்திரியாகவும் இருப்பவர். அரசாங்கத்தின் லிபரல் முகமாகக் கருதப்படும் ஹரிணி அமரசூரிய. ஆனால் அவரால் இன்று வரை பாடசாலைகளில் ஆசிரியைகளின் ஆடை விவகாரத்தில் காணப்படும் பால் அசமத்துவத்தை நீக்க முடியவில்லை.

பிள்ளைகளின் உளவியலை பாரதூரமான விதங்களில் பாதிப்பது என்று கல்வி உளவியலாளர்களால் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்ட ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையான தேசிய சித்திரவதையை நிறுத்த முடியவில்லை.

இது தான் அரசியல் சூழல் என்றால் ஆசிரியருக்கு எது பொருத்தமான வோல்டேஜ் என்பதனை போட்டிப் பரீட்சைக் கல்வி முறைமைதான் இனியும் தீர்மானிக்கும்

# தமிழக அரசியலில் விஜய் மாற்றத்தை ஏற்படுத்துவாரா?

கட்டுரையாளர்:
குடந்தையான்

தமிழக அரசியல் களம் எதிர்வரும் 23ஆம்திகதி நடைபெறும் சட்டப் பேரவை பொது தேர்தலுக்கான வாக்கு அரசியலில் தகித்துக் கொண்டிருக் கிறது. தி.மு.க. தலைமையிலான 'இந்தியா' கூட்டணி அதி.மு.க. தலை மையிலான 'தேசிய ஜனநாயக கூட் டணி', சீமான் தலைமையிலான 'நாம் தமிழர் கட்சி' ஆகிய தேர்தல் அரசிய லில் ஈடுபட்டிருக்கும் கட்சிகளுக்கு சவால் விடும் வகையில், தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரமாக திகழும் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் தனித்து போட்டியிடுகிறது. இதனால் தமிழக சட்ட பேரவைக்கான பொது தேர்தல் – நான்கு முனைப் போட்டியாக அமைந் துள்ளது.

தமிழக அரசியல் களத்தில் எப்போ தெல்லாம் புதிய அரசியல் கட்சியும், அரசியல் தலைவர்களும் களம் காண் கிறார்களோ, அப்போதெல்லாம் மாற்றம் ஏற்பட்டு விடும் என்று நம்புகிறார்கள் வாக்காளர்கள். அதிலும், தமிழ் திரை யுலகத்திலிருந்து தமிழக அரசியலுக்கு வந்தால் அவர்கள் மாற்றத்தை ஏற்படு த்தி விடுவார்கள் என்ற அப்பாவித் தனமான நம்பிக்கையை வாக்காளர் கள் கொண்டுள்ளார்கள்.

தமிழ் சினிமாவில் இருந்து வந்த கலைஞர் கருணாநிதி, எம்ஜிஆர், ஜெயலலிதா, மு க ஸ்டாலின் ஆகி யோருக்கு வெற்றியை தமிழக வாக்காளர்கள் வெற்றியை வழங்கினர்.

இத்தகைய திரையுலக கவர்ச்சி அரசியலை ஏற்றுக் கொள்ளும் தமிழக வாக்காளர்கள் தங்களையும் ஏற்றுக் கொண்டு வெற்றி பெறச் செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன் சிவாஜி கணே சன், டி. ராஜேந்தர், விஜயகாந்த், சீமான் ஆகியோர் அரசியல் கட்சியை தொட ங்கி மக்களை சந்தித்தனர். இவர்களில் யாருக்கும் தமிழக மக்கள் ஆட்சி அதிகாரத்தை வழங்கவில்லை. ஆனா லும் தமிழக வாக்காளர்களில் பத்து சதவீதத்தினர் மாற்றம் நிகழ்ந்து விடும் என்ற நம்பிக்கையில் இவர்களுக்கு வாக்களித்தனர்.

வாக்காளர்களின் இந்த தரவுகளை வைத்துக் கொண்டு தான் தமிழக வெற்றி கழகம் தேர்தல் அரசியலில் ஈடுபட தொடங்கியது.

ஆளுங் கட்சிக்கு எதிரான அதிருப்தி, இரண்டு தலைமுறைகளுக்கும் மேலாக நீடிக்கும் திராவிட மொடல் அரசாங்கம் மீது எதிர்ப்புணர்வை கொண்டிருப்பவர்கள், மாற்றத்தை விரும்பும் வாக்காளர்கள், கடந்த சில ஆண்டுகளாக பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுடன் சித்தியடைந்த மாண வர்களுக்கு விருது, ரொக்கம், கௌர வம் கொடுத்து, முதல் முறையாக வாக்களிக்கும் இளம் தலைமுறை வாக்காளர்களை கவர்ந்தமை, திரை யுலகில் நட்சத்திரமாக இருந்த போது தமிழகம் முழுவதும் இருக்கும் நாற்பது இலட்சத்திற்கும் மேற்பட்ட இரசிகர் மன்ற உறுப்பினர்களை ஒருங்கிணைத்து வாக்காளர்களாக மாற்றியமை என பல்வேறு தரவுகளை கையில் வைத்துக் கொண்டு தேர்தல் களத்தில் இறங்கினால் குறைந்த பட்சம் 27 சத வீதத்திலிருந்து 32 சத வீதம் வரை வாக்குகளை பெற முடியும் என்று நம்பி... தமிழக வெற்றி கழகம் தேர்தல் அரசியலில் ஈடுபட்டிரு க்கிறது. எனவே அக்கட்சியின் தேர்தல் வியூ கம் துல்லியமானவையே என தேர்தல் வியூக நிபுணர்கள் உறுதிபட தெரிவிக்கிறார்கள்.

ஆனால் இவை சாத்தியப்படுத்து வதற்கான வழி முறைகளில், அதாவது வாக்குகளை ஒருங்கிணைத்து விசில் சின்னத்திற்கு மடைமாற்றம் செய்வதில் தான் சிக்கல்கள், குளறுபடிகள், இடை வெளி ஏற்பட்டிருப்பதாக தமிழக வெற்றிக் கழகத்தின் கள நிபுணர்கள் பகிர்ந்து கொள்கிறார்கள்.

தமிழக வெற்றிக் கழகத்தின் குறை என்னவென்று தேர்தல் வியூக நிபுணர் கள் பகிர்ந்து கொள்ளும் போது, தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் திராவிட கட்சிகள் ஒவ்வொன்றிலும் அவை தி.மு.க.வாக இருந்தாலும் அல்லது அதி.மு.க.வாக இருந்தாலும் அவர்களின் தலைவர்கள் மக்களை நேரடியாக சந்தித்து, தெருமுனை



கூட்டத்தை கூட்டி, அங்கு திரண்டு இருக்கும் மக்களிடம் உணர்வு பூர்வமாகவும், அறிவு பூர்வமாகவும், அரசியல் விழிப்புணர்வு எப்படி ஏற்பட வேண்டும், யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதனை குழப்பம் அடையாமல் வாக்காளர்களுக்கு தெளிவுபட உரையாற்றுவார்கள். இத் தகைய மக்கள் சந்திப்பு மூலம் மேற் கொள்ளப்படும் தலைவர்களின் பிரசாரம், அவர்கள் மீதான நம்பிக் கையை உளவியல் ரீதியாக மேம்படுவ துடன் அக்கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்ற உள்ளக்கிடக்கையை உண்டாக்குகிறது.

எந்த கட்சிக்கு, அல்லது எந்த சின்னத் திற்கு வாக்களிக்கலாம் என்பதில் சலனமான மனதுடன் இருக்கும் பத்து சதவீத பொது மக்கள் வாக்களிக்கும் வரை அல்லது அதற்கு சில மணித்தியாலங்கள் முன்பு வரை அவர்களது கவனத்தில் தொடர்ந்து எது விதைக்கப்படுகிறதோ அதுவே தேர்தலில் வாக்காக எதிரொலிக்கிறது.

அதனால் தான் தி.மு.க. , அ.தி.மு.க. உள்ளிட்ட திராவிட கட்சிகளும், பா.ஜ.க, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளி ட்ட தேசிய கட்சிகளும், பா.ம.க, தே.மு.தி.க., மதி.மு.க., வி.சி.க – உள்ளிட்ட மாநில கட்சிகளும் தேர்தல் பிரசாரத்திற்காக தேர்தல் ஆணையத் தால் ஒதுக்கப்பட்டு இருக்கும் இரு பது நாட்களை ஒவ்வொரு மணித் துளியும் முக்கியம் என வாக்காளர் களை அசராமல் சந்தித்து ஆதரவு திரட்டிக் கொண்டே இருப்பார்கள்.

இந்த விடயத்தில் தான் தமிழக வெற்றிக் கழகம் பெரும் பின்ன டைவை எதிர் கொண்டிருக்கிறது. அதிலும், கரூர் சம்பவத்திற்கு பிறகு அக்கட்சியினருக்கு மக்களிடையே ஆதரவு இருந்தாலும் அக்கட்சியின் தலைவர்கள் நினைத்தபடி சுதந்திரமாக வாக்காளர்களை சந்தித்து பிரசாரத்தை மேற்கொள்ள முடியாத சூழல் ஏற்பட் டிருக்கிறது. இத்தகைய சிக்கலை தமிழக வெற்றிக் கழகம் தானே உரு வாக்கிக் கொண்டது. இதுதான் இக் கட்சியினர் தற்போது தேர்தல் அரசிய லில் எதிர்கொண்டிருக்கும் மிகப்பெரிய இடர்பாடு.

ஆனால், இதனை மற்றொரு அரசியல் வியூக நிபுணர்கள் மறுக்கிறார்கள். தற்போது மாறிவிட்ட அரசியல் சூழலால் மக்கள் யாரும் பொதுக் கூட்டங்களுக்கு தெருமுனை கூட்டங் களுக்கு... வருவதை விரும்புவ தில்லை. ஏதேனும் இலவச பொருட்கள் வழங்கினால் தான் பொது கூட்டங் களுக்கு வருகிறார்கள். அதிலும் பேச்சை கவனிப்பதை விட, இலவசப் பொருளை எப்போது தருவார்கள் என்ற எண்ணமே அதிகமாக இருப்ப தால் இத்தகைய பிரசாரத்தின் மூலம் வாக்காளர்களுக்கு தேர்தல் அரசியல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இயலும் என்பது தவறான பார்வை.

மேலும் தற்போது மக்கள் தங்களு டைய நாளாந்த கடமைகளையும், தேவைகளையும் இணையம் மூல மாகவே பாவிக்கிறார்கள். அத்துடன் தங்களுடைய கையில் இருக்கும் இலத்திரனியல் சாதனத்தை வாழ் வாதாரமாகவும் பொழுதுபோக்கு அம்சமாகவும், தங்களுடைய எண்ண ங்களை பகிர்ந்து கொள்ளும் வடி காலாகவும் பயன்படுத்த தொடங்கி விட்டனர். அதனால், சமூக வலை தளங்களின் மூலமான பிரசாரம் தான் முதன்மையானது. போதுமானது. இந்த விடயத்தில் தமிழக வெற்றிக் கழகம் தீவிரமாக இயங்கி வருவதால் அக்கட்சிக்கான வாக்கு சதவீத பதிவில் எந்த மாற்றமும் இருக்காது என அவர்கள் கூறுகின்றனர்.

தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெறும் என்பதற்கு அக்கட்சியின் தலைவரான விஜய் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை குறிப்பிட லாம். அந்த வாக்குறுதிகள் பெரும் பாலும் இளைய தலைமுறையினர் விரும்பும் வகையில் உள்ளது என்ப தால் முதல் தலைமுறை வாக்காளிக் கும் வாக்காளர்களை விட நாற்பது வயதிற்குள் இருக்கும் இந்த தலை முறையினரைக் கவர்ந்துள்ளதால் அவர்களுடைய வாக்கு தமிழக வெற்றிக் கழகத்திற்கு கிடைக்கக் கூடும்.

நல்ல ஆட்சி, நேர்மையான நிர்வாகம், ஊழலற்ற ஆட்சியை வழங்குவேன் என வாக்குறுதி கொடுக்கும் விஜய்யின் கட்சியில் ஊழலால் கைது செய்யப் பட்ட செங்கோட்டையன், கு ப கிருஷ் ணன் போன்ற முன்னாள் அதி.மு.க. அமைச்சர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டு இருப்பதால் தமிழக வெற்றிக் கழகமும் ஏனைய இரண்டு திராவிட கட்சிகளை போன்றது தான் என அரசியல் பார்வை யாளர்கள் கூறுகிறார்கள்.

அதனால் இந்த முறை தமிழக சட்டப் பேரவைக்கு நடைபெறும் பொது தேர்தலில் தமிழக வாக்காளர்கள் மாற்ற. த்தை ஏற்படுத்துவார்கள் என்ற ஒரு சிறிய அளவிலான புதிய நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இதனை உறுதிப்படுத்துவது ஏப்ரல் 23ஆம் திகதி அன்று நடைபெறும் பொது தேர்தலில் மக்கள் அளிக்கும் வாக்கு. கள் தான் நிர்ணயம் செய்யும்.

# பிதாவே! துப்பாக்கி இல்லாத....

(19ம் பக்கத் தொடர்ச்சி) துப்பாக்கிகள் இல்லாத பெரிய வெள்ளியை இலங்கை கிறிஸ்தவர்களுக்கு உறுதிப்படுத்த முடிய வில்லையா? ஈஸ்டர் பெருநாளை முன்னிட்டு கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது. ஆனால் அதற்கு முன்பிருந்தே வடக்கு கிழக்கில் உள்ள படைத்தளங்களில் உள்ள பௌத்த விகாரர்களுக்கு படையினர் பாதுகாப்பு வழங்கி வருகிறார்கள். அண்மை ஆண்டுகளாக தையிட்டி விகாரைக்கும் அதுதான் கதி.


நான்கு மதங்களும் செழித்தோங்கி காணப்படும் இச்சிறிய தீவில் ஏன் ஒரு பகுதி ஆலயங்களை அல்லது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஆலயங்களை ஆயுதம் தாங்கிய போலீசாரும் படையினரும் பாதுகாக்க வேண்டியிருக்கிறது? ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து 16 ஆண்டுகளின் பின்னரும் ஈஸ்டர் குண்டு வெடிப்பு நிகழ்ந்து 7ஆண்டுகளின் பின்னரும் இனங்களுக்கு இடையிலும் மதங்களுக்கு இடையிலும் மொழிகளுக்கு இடையிலும் பதட்டம் உண்டு. சந்தேகம் உண்டு. பாதுகாப்பு தொடர்பான அச்சங்கள் உண்டு.

ஏனென்றால் இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை, பல்சமயச் சூழலை, பல்மொழிச் சூழலை ஏற்றுக் கொண்டு எல்லா இனங்களும் மதங்களும் தாங்கள் பாதுகாப்பாக இருப்பதாகக் கருதத்தக்க ஒரு தீர்வை இனப்பிரச்சனைக்கான தீர்வைக் கொடுப்பதற்கு கடந்த ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேலாக இந்த நாட்டை ஆட்சி செய்த எந்தவோர் அரசாங்கமும் தயாராக இருக்கவில்லை.


மாற்றத்தை வாக்களித்து வந்த தேசிய மக்கள் சக்தியால் அதைச் செய்ய முடியுமா? அரசாங்கம் கூறுகிறது, இப்பொழுது இனவாதம் இல்லை என்று. ஆனால் இனவாதம் இல்லை என்று கூறிக் கொண்டிருப்பதனால் அது இல்லாமல் போய் விடாது. மாறாக இச்சிறிய தீவில் இனவாதம் இல்லை என்பதனை தமிழ் மக்கள் எப்பொழுது ஏற்றுக்கொள்வார்கள் என்றால், இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு தீர்வு வழங்கப்படும் போது மட்டும்தான்.

தமிழ் மக்கள் இந்தச் சிறியதீவு தங்களுக்கு பாதுகாப்பானது என்று நம்ப வேண்டும். தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்றால், இச்சிறிய தீவில் சிங்கள மக்களுக்கும் பாதுகாப்பு இல்லை. முஸ்லிம் மக்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்பதைத் தான் கடந்த மூன்று நாட்களாக கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு முன்பாக துப்பாக்கிகளோடு உஷார் நிலையில் நிற்கும் போலீசாரும் படைத்தரப்பும் உணர்த்துகின்றன.

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! மதிப்பு அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் வேகமான போக்கு காணப்படும். கிடப்பில் இருந்த கடன்கள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்கள் உங்களுக்கு மனவருத்தத்தை தருவதாக இருக்கலாம். கவனமாக கையாள்வது நல்லது.





ரிஷபராசி அன்பர்களே! மனோதைரியம் கூடும். புதிய நட்பு கிடைக்கும். எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத தடங்கல்கள் வரலாம். பண வரத்து இருந்தாலும் தேவை அதிகரிக்கும். புதிய வாடிக்கையாளர்களால் நன்மை உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணி புரிவார்கள். சிலருக்கு புதிய பதவி புதிய பொறுப்புகள் கிடைக்கலாம்.





மிதுனராசி அன்பர்களே! சுப காரிய தடைகள் அகலும். நீண்டநாள் இழுபறியாக இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த பின்தங்கிய நிலை மாறும். எதிர்பார்த்த ஆர்டர்கள் வந்து சேரும். வியாபார போட்டிகள் தடை தாமதங்கள் நீங்கும். உத்தியோகத்தில் சாமர்த்தியமாக செயல்பட்டு மேலகாரிகளின் பாராட்டுகளை பெறுவர். பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் உண்டாகும்.





கடகராசி அன்பர்களே! தடைகளை தகர்த்தெறிந்து முன்னேற்றம் காண்பீர்கள். தெளிவான முடிவு எடுப்பதன் மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். அரசாங்கம் தொடர்பான விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். கடினமான வேலைகள் கூட சுலபமாக முடியும். மரியாதையும், அந்தஸ்தும் அதிகரிக்கும். கடினமான முயற்சிகள் கூட எளிமையாக செய்ய முடியும். தொழில் வியாபாரத்தில் கடன் பாக்கிகள் வசூலாகும்.





சிம்மராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். நினைத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். தொழில் வியா பாரத்தில் பார்ட்னருடன் அனுசரித்து செல்வது நல்லது. வியாபார போட்டிகள் குறையும்.




கன்னிராசி அன்பர்களே! காரிய வெற்றி உண்டாகும். புத்தி சாதுரியத்தால் எதையும் செய்து முடிப்பீர்கள். மற்றவர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். செவ்வாய் சஞ்சாரத்தால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். உத்யோகத்தில் சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. புதிய பொறுப்புகள் ஏற்க வேண்டி இருக்கும்.





துலாம்ராசி அன்பர்களே! ஆராய்ந்து செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். மருத்துவம் சார்ந்த செலவுகள் நேரலாம். ஆயுதங்கள் கையாளும் போதும், வாகனங்களை ஓட்டும் போதும் எச்சரிக்கை அவசியம். அடுத்தவர்களுக்கு உதவ போய் வீண் பழி ஏற்படலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதி கரிக்கும். வாடிக்கையாளர்களின் கருத்து க்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். வியாபார ஸ்தலத்திற்காக புதியதாக இடம் வாங்குவீர்கள்





விருச்சிகராசி அன்பர்களே! எதையும் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது நல்லது. எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனத்துடன் வைப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்பட்டாலும் வந்து சேர்வதில் எந்த தடைகளும் இருக்காது. உத்யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! தடைப்பட்டு வந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். ராசியில் குரு இருப்பதன் மூலம் ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களிடம் நன்மதிப்பை பெறுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் நேர்மையாக சிறப்பாக பணிகளை செய்து மேலதிகாரிகளிடம் பாராட்டுக்கள் கிடைக்க பெறுவர்.




மகரராசி அன்பர்களே! கொடுக்கல், வாங்கலில் இருந்த பிரச்சனை தீரும்.எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். அரசாங்கம் மூலம் லாபம் ஏற்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் சாதகமாக இருக்கும். தொழில் வியாபாரம் லாபகரமாக நடக்கும். தடைபட்ட ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த வேலையை செய்து முடித்து நன்மதிப்பை பெறுவார்கள்.




கும்பராசி அன்பர்களே! சுபச்செலவு அதிகரிக்கும். மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். ஒதுங்கி சென்றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம். கவனமாக இருப்பது நல்லது. கண் சம்பந்தமான கோளாறுகள் ஏற்படலாம். வேளை தவறி உணவு உண்ணும்படி நேரலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் போட்டி இருக்கும். வேலை செய்யும் இடத்தில் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது




மீனராசி அன்பர்களே! எதிலும் முன்னேற்றம் காணப்படும். பாக்கியஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன் மற்றும் கேதுவால் பொருள்வரத்து அதிகரிக்கும். வாகனம், பூமி மூலம் லாபம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். தைரியாதிபதி சூரியனும் தொழில் ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்கிறார். எதிர்பார்த்த லாபம் வரும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த ஆர்டர்கள் கைக்கு வந்து சேரும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## தேசிய மக்கள் சக்தியைத் தவிர வேறெந்த அரசியல் கட்சியாலும் ஏன் தனித்தியங்க முடியவில்லை

(9ம் பக்கத் தொடர்ச்சி) உட்படுத்தப்பட்டுள்ளார். இவ்வாறான அண்மைய சம்பவங்கள் ஆட்சித்தரப்பில் காணப்படும் இடைவெளியையும், வளைகுடா யுத்தத்தினால் மக்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும் ஆட்சித்தரப்பை இழுத்து வீழ்த்துவதில் எதிர்கட்சிகள் கொண்டிருக்கும் ஆர்வத்தையும் புரிந்து கொள்ள வைக்கிறது.

ஆயினும் இலங்கை அரசியலில் தேசிய மக்கள் சக்தியைத் தவிர வேறெந்த அரசியல் கட்சியும் தனித்து ,யங்க முடியாது தடுமாறிக் கொண்டிருக்கின்றன. அடிக்கடி எதிரணிகள் ,ணைப்புப் பற்றி பேசப்பட்டாலும் சாண் ஏற முழம் சறுக்கும் நிலைமையே காணப்படுகிறது.

தென்னிலங்கையில் மட்டுமன்றி தமிழர் தாயகத்திலும் இதுவே நிலைமை. தேர்தலை ஒட்டிய இணைப்புகள் பிணைப்புகள் என்று அவ்வப்போது பேசப்பட்டாலும் அவற்றில் வெற்றி காணும் நிலைமை எங்கும் இல்லை. இணக்கப் பேச்சுகள் முன்னேற்றம் காண்பதாக அறிவிக்கப்பட்டாலும் அது தற்காலிக பொறிப்பந்தலாகவே மாறிவிடுகிறது. இதுவே தேசிய மக்கள் சக்தி தனித்து தனது திட்டங்களை நிறைவேற்றி வருவதற்கு அனுகூலமாக அமைந்து வருகிறது.

## நல்லூர் மந்திரிமனை கண் முன்னே அழிந்து போகுது!

(6ம் பக்கத் தொடர்ச்சி) நல்லூர் மந்திரிமனையை இவ்வாறு விடுவது முழுமையாக அழிய விடு வது தான் நோக்கமா என்ற ஆதங்கம் பலரிடம் உள்ளது. அதற்கு அருகில் இருப்பதால் எனக்கும் அந்த ஆதங்கம் உண்டு யாழ்ப்பாண தமிழ் மன்னரின் ஒரே ஒரு வரலாற்றுச் சின்னம் அழிவடைந்து போவதை ஏற்க முடியாது. அதற்கான அக்கறையோடு கடந்த காலத்திலிருந்து பல முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் இரண்டு சாரார்களும் ஒவ்வொரு தடையை போட்டு வந்திருக்கிறார்கள். நான் யாரையும் குற்றம் சாட்ட விரும்பவில்லை. தற்போது இந்த விடயம் முன்னெடுக்கப்பட வேண்டும். இது சாரரும் தங்கள் பதிலை இரண்டு கிழமைக்குள் வெளிப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன் என மேலும் தெரிவித்தார்.

## கம்மன்பிலவின் நூல் வெளியீட்டு விழாவில்

(6ம் பக்கத் தொடர்ச்சி) அடங்குவதாகத் தெரியவருகிறது. இந்த விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் மக்களுக்குத் தெளிவுபடுத்தவும் அக்குருமார்கள் எதிர்பார்த்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. உதய கம்மன்பிலவின் இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர்கள் பங்கேற் றமை குறித்து முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க ஏற்கனவே தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

மேலும் நலின் பண்டார அவர் செல்ல வில்லை அது செயற்கை நுண் ணறிவு என்றார்.அதன் பின்னர் கட்சி யின் செயலாளர் தாங்கள் சென்றதாக ஒப்புக் கொண்டுள்ளார். அத்தோடு முஜுபுர் ரஹ்மான் நடத்திய ஊகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் வினவியபோது அது எதிர்க் கட்சித் தலைவரிடம் தான் கேட்க வேண்டும் என குறிப்பிட்டிருந்தார்.

## சாராஜெஸ்மின் உயிருடன் இருக்கின்றாரா?

(8ம் பக்கத் தொடர்ச்சி) கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் சாரா ஜெஸ்மினின் வீட்டுக்கு சென்று அவரிடம் தாயிடம் உங்களின் மகள் இறக்கும் போது இரண்டு மாத கர்ப்பினி என்றும், அவரை இராணுவம் அடக்கம் செய்துள்ளது என்றும் பொலிஸார் கூறியுள்ளனர். ஆனால் சாரா ஜெஸ்மின் உயிருடன் இருப்பதாக அமைச்சர் கூறியிருந்தார். இதனால் இந்த விடயத்தில் சில சந்தேகங்கள் இருக்கின்றன. இதனை திசை திருப்ப சில அதிகாரிகள் முயற்சிக்கின்றனரா, என்ற சந்தேகங்கள் உள்ளன.

அத்துடன் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் சனல் 4 வெளியிட்ட ஆவணப் படத்தை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் நடத்தப்படும் என்று அமைச்சர் குறிப்பிடுகிறார். இதற்கு முன்னரும் இரண்டு ஆவணப் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அது தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

## பிரான்ஸில் ஈழத்தமிழ் தாயும் மகளும் சடலங்களாக

(3ம் பக்கத் தொடர்ச்சி) விரைந்த அதிகாரிகள் வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்றுள்ள னர். இதன்போதே இருவரும் உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப் பட்டனர். உயிரிழந்தவர்கள் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட 50 வயது மதிக்கத்தக்க தாயும், அவரது 20 வயது மகளும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆரம்ப கட்ட விசாரணைகளின் அடிப் படையில் இவர்கள் தற்கொலை செய்தி ருக்கலாம் என சந்தேகிக்கப்பட்ட போதி லும், உடற்கூறு ஆய்வு முடிவுகள் வெளி வந்த பின்னரே மரணத்திற்கான அதிகாரப்பூர்வமான காரணம் தெரிய வரும். அவர் கள் தங்கியிருந்த வீட்டி லிருந்து ஏதேனும் கடிதங்கள் அல்லது முக்கிய ஆதார ங்கள் கண்டெடுக்கப் பட்டதா என்பது குறித்த விபரங்களை பொலிஸார் இதுவரை வெளியிட வில்லை. இவர்களின் உயிரிழப்பிற்கான காரணம் குறித்து பிரான்ஸ் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இலங்கையில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள

(24ம் பக்கத் தொடர்ச்சி) அரசாங்கமும் பழைய பாதையிலேயே பயணிப்பதாகவும், இன்னமும் அப்பாவி மக்களைத் தடுத்து வைக்க இந்தச் சட்டம் பயன்படுத்தப் படுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது 1979ஆம் ஆண்டு ஒரு தற்காலிக அவசரகால நடவடிக்கையாகக் கொண்டு வரப்பட்டது. ஆனால், நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக நடைமுறையில் இருக்கும் இந்தச் சட்டம், சிறுபான்மையினருக்கும் அரசியல் ரீதியாக மாறுபட்ட கருத்துடையவர்களுக்கும் எதிராகவே அதிகம் பயன்படுத்தப்பட்டு வருவதாகச் சர்வதேச சமூகம் தொடர்ச்சியாகக் கவலை தெரிவித்து வருகிறது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது வெறும் சட்ட ரீதியான விடயம் மட்டுமல்ல, அது இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் ஒரு அரசியல் நகர்வாகும் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது

# பிதாவே! துப்பாக்கி இல்லாத பாதுகாப்பான பெரியவெள்ளி எப்போது?

கடந்த வியாழக்கிழமை பெரிய வெள்ளியை முன்னிட்டு யாழ்ப் பாணத்தின் பெரும்பாலான கிறிஸ்தவ கோவில்களில் படையினர் அல்லது போலீசாரின் பிரசன்னத்தைக் காண முடிந்தது.துப்பாக்கிகளோடு ஆலய வாசலில் அல்லது அதன் சூழலில் காணப்பட்டார்கள்.

ஈஸ்டர் குண்டுகள் வெடித்து கிட்டத் தட்ட 7.ஆண்டுகள் ஆகி விட்டன. அந்தக் குண்டுகளின் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பது தொடர்பாக பல்வேறு ஊகங்களும் உண்டு. அது தொடர்பாக பல்வேறு வகைப்பட்ட வாக்கு மூலங்களும் உண்டு. நாடு போரில் இருந்து மீண்டு விட்டதாக கூறிக்கொள்கிறது. நாட்டில் இனவாதம் இல்லை என்று இப்போதுள்ள அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் துப்பாக்கிகள் அற்ற பாதுகாப்பான ஈஸ்டர் எப்பொழுது கிறிஸ்தவர்களு க்குக் கிடைக்கும்?



ஈஸ்டர் குண்டு வெடிப்பின் பின்னணி யில் உள்நாட்டில் தமது வாக்கு வங்கியைப் பாதுகாக்கும் நோக்கத் தைக் கொண்ட சக்திகள் இருந்ததாக சந்தேகங்கள் உண்டு. பேராயர் மல்கம் ரஞ்சித் அது தொடர்பாக தொடர்ச்சி யாகப் பேசி வருகிறார். ஆனால் இங்கே ஓர் அடிப்படை உண்மையை மறந்து விடக்கூடாது.

யார் பின்னாலிருந்து கையாண்டாலும் கையாள விட்டாலும் தங்கள் உடல் களைக் குண்டுகளாக மாற்றி கிறிஸ் தவ தேவாலயங்களின் மீது. குறிப்பாக அதிகளவு தமிழர்கள் கலந்து கொள் ளும் பிரார்த்தனை நேரங்களில் தாக்கு தல் நடத்தப்பட்டது. தன்னுடைய மத அரசியல் நம்பிக்கைகளுக்காக தன் னையே வெடிகுண்டாக்கி வெடித்துச் சிதறுவது என்பது சாதாரணமானது அல்ல. அவ்வாறு செய்வதற்கு ஒரு வைராக்கியம் வேண்டும். தமது இலட்சியத்தின் மீது ஆழமான பற்று றுதி இருக்க வேண்டும். தனது நம்பிக்கைகளை தனது உயிரினும் மேலாக கருதும் ஒருவரால்தான் அவ்வாறு குண்டாக மாறி வெடித்துச் சிதற முடியும். அவ்வாறு தன் உயி ரைக் கொடுத்து தன் மத நம்பிக் கையைப் பாதுகாப்பதற்குத் தயாராக கொஞ்சம் பேர் நாட்டில் இருந்தார்கள் என்பது உண்மை.அவர்களை வெவ் வேறு நோக்கு நிலைகளிலிருந்து வெவ்வேறு சக்திகள் கையாண்டு இருக்கலாம். ஆனால் அவ்வாறு கையாண்டவர்கள் மனிதக் குண்டு களை உற்பத்தி செய்யவில்லை. அவர்களால் அது முடியாது.

எனவே மனிதக் குண்டுகளை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு மத அரசியல் சூழல் நாட்டில் இருந்தது என்பதை முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதை இன்னும் ஆழமான வார்த்தைகளில் சொன்னால், நாட்டில் மதங்களுக்கு இடையிலும் இனங்களு க்கு இடையிலும் பிரச்சினைகள் ஏற்கனவே இருந்தன என்பது தான் மூல உண்மை. ஏற்கனவே இருந்த பிரச்சினைகளை ஏனைய சக்திகள் கையாண்டன என்பது தான் இரண் டாவது உண்மை. எனவே வெளிச் சக்திகள் கையாண்டதால் மனிதர்கள் குண்டுகள் ஆவதில்லை. குண்டுகளை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு மத அரசியல் சூழல் ஏற்கனவே இருந்தது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஈஸ்டர் குண்டுவெடிப்பில் மட்டுமல்ல இனப்பிரச்சினையிலும் அது தான் உண்மை. ஏற்கனவே இருக்கும் ஒரு பிரச்சினையைத் தான் ஏனைய சக்திகளும் வெளிச் சக்திகளும் கையா ளலாம். எனவே ஏற்கனவே ஒரு பிரச்சினை இருந்தது என்பதுதான் அடிப்படை உண்மை.

உதாரணமாக ஆப்கானிஸ்தானில் தாலி பான்களை வளர்த்தெடுத்தது அமெ ரிக்கா. ஆனால் ஏற்கனவே இருந்த சோவியத் எதிர்புணர்வுக்கு இஸ்லாமிய தீவிர நிலைப்பாடுகளுக்குக் அமெ ரிக்கா ஆயுதம் கொடுத்து வளர்த்து விட்டது. ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதத்தை வளர்த்து விட்டது அமெரிக்கா தான் என்று கூறுவார்கள். அங்கேயும் ஏற்கனவே இருந்த அடிப்படை வாதத்தை வெறுப்பை, போராட்டத்து க்கான தேவையை அமெரிக்கா கையாண்டது என்பது தான் சரி.

இப்படிப் பார்த்தால் ஈஸ்டர் குண்டு வெடிப்பும் உட்பட உலகில் பெரும் பாலான இனப்பிரச்சினைகள் மதப் பிரச்சினைகள் போன்றவை வெளிச் சக்திகளால் வளர்த்தெடுக்கப்படுகின்ற னவே தவிர வெளிச்சக்திகளால் உற்பத்தி செய்யப்படவில்லை. அவை ஏற்கனவே உள்நாட்டில் இருந்தன. ஏற்கனவே இருந்த ஒரு பிரச்சினையை வெளிச் சக்திகள் தங்கள் தங்கள் நோக்கு நிலைகளில் இருந்து கையா ளுகின்றன.

ஈஸ்டர் குண்டுவெடிப்பை முன்னெடு த்த மனிதக் குண்டுகளை உள்நாட்டுச் சக்திகள் தங்கள் தேர்தல் நோக்கத் துக்காகக் கையாண்டார்கள் என்ற சந்தேகம் பொதுவாக உண்டு. அது போலவே இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் இந்திய புலனாய்வுத் துறை இருந்ததாகவும் குற்றச்சாட்டு கள் உண்டு.

ஆனால் ஏற்கனவே இருந்த ஒன்றைத் தான் யாரும் கையாண்டிருக்கலாம் என்ற விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால்.வெளிச் சக்திகளால் கையாள ப்படத்தக்க இன.மதச் சூழல் ஒன்று நாட்டில் இருந்தது என்பதே மூல காரணம் ஆகும்.

இந்தியா ஏன் இதில் சம்பந்தப்பட வேண்டும்? இலங்கையில் இஸ்லாமிய அடிப்படை வாதம் தலையெடுத்து விட்டது என்பதை எடுத்துக்காட்டி அதன் மூலம் இந்திய அரசாங்கம் தனது இந்துத்துவா நிலைப்பாட்டை நியாயப்படுத்தவும் இந்துக்களின் வாக்குகளைத் திரட்டவும் முடியும் என்பதற்காகவே இந்தியா அதில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்பது அந்த ஊகம் ஆகும்.

ஆனால் இத்தாக்குதல்கள் தொடர்பான எச்சரிக்கையை இலங்கைக்கு முதலில் வழங்கிய தரப்புகளுக்குள் இந்தியாவும் அடங்கும். அத் தாக்குதல்களால் இந்தியாவுக்கு நன்மை கிடைக்கும் என்று சொன்னால்.அதைத் தடுத்து நிறுத்தக்கூடிய விதத்தில் இந்தியா இலங்கையை எச்சரித்திருக்காது.ஒரு தாக்குதலில் சம்பந்தப்பட்ட வெளிநாடு அந்தத்தாக்குதலை தடுத்து நிறுத்தக் கூடிய எச்சரிக்கையை குறிப்பிட்ட நாட்டுக்கு முன்கூட்டியே வழங்குமா?

இந்தியா எச்சரித்தது மட்டுமல்ல. இந்த விடயத்தில் அரசாங்கத்துக்கும் முன்கூட்டியே தகவல்கள் கிடைத்தன என்று கூறத்தக்க ஆதாரங்கள் நிறைய உண்டு.அப்போதிருந்த ரணில் மைத்திரி அரசாங்கம் ஆனது உட் பூசல்களால் மிகவும் பலவீனமாகக் காணப்பட்டது. ஆட்சி மாற்றத்தின் பங்காளிகளில் ஒருவர் ஆகிய மைத்திரி பால சிறிசேன யாப்புச்சதி முயற்சி ஒன்றின் மூலம் அரசாங்கத்தின் ஸ்திரத் தன்மையை குறைத்து விட்டிருந்தார். அவர் முன்னெடுத்த 52 நாள் யாப்புச் சதிப் புரட்சியானது அரசாங்கத்தின் செயல் திறனை பெருமளவுக்குப் பாதித்திருந்தது. அப்படிப்பட்ட ஒரு பின்னணிக்குள் தான் குண்டுகள் வெடி த்தன.

ஈஸ்டர் குண்டு வெடிப்புகளுக்கு முன்னதாக அந்த ஆண்டு பெப்ரவரி மாதம் மைத்திரிபால சிறிசேன முக்கிய கட்சி தலைவர்களை தன்னுடைய இடத்துக்கு அழைத்து இஸ்லாமிய அடிப்படை வாதம் தொடர்பாக முன் கூட்டியே எச்சரித்து இருக்கிறார். இரவுச் சாப்பாட்டோடு நடந்த அந்தச் சந்திப்பில் இஸ்லாமிய அடிப்படை வாதத்தின் பிரசன்னத்தைக் குறிக்கும் காணொளிகளும் காட்டப்பட்டுள்ளன. அதில் ஒரு பகுதி காணொளிகள் தமிழில் காணப்பட்டன என்று அந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட கொழும்பு மைய தமிழ் கட்சித் தலைவர் ஒருவர் இக்கட்டுரையாளருக்குத் தெரிவித்தார்.

எனவே ஒரு பாரதூரமான தாக்குதலை முன்கூட்டியே ஊகித்துத் தடுக்கத் தேவையான முன்னெச்சரிக்கைகள் அரசாங்கத்திற்கு ஏற்கனவே கிடைத்தி ருந்தனவா? அரசாங்கம் அந்த முன் னெச்சரிக்கைகளின் அடிப்படையில் தற்காப்பு நடவடிக்கைகளை பாது காப்பு ஏற்பாடுகளைச் செய்ய முடியாத அளவுக்கு பலவீனமாக இருந்தது என்பதும் உண்மையா?

கடந்த வாரம் இது தொடர்பான ஒரு நூல் வெளியிடப்பட்டுள்ளது. முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினராகிய உதய கமன்பில எழுதிய ஈஸ்டர் குண்டு வெடிப்பும் அதன் சூத்திரதாரி களும் என்ற நூல் வெளியீட்டு விழா வில் முன்வரிசையில் ராஜபக்சக்கள் மட்டும் காணப்படவில்லை. சஜித் பிரேமதாசவும் காணப்பட்டார். அது சிங்களத்தில் எழுதப்பட்ட ஒரு நூல். அதை வாசிக்க இக்கட்டுரையாளரால் முடியாது. எனினும் கொழும்பு மைய அரசியல் பிரமுகர் ஒருவர் மும்மொழி களிலும் ஆளுமை உடையவர். அந்த நூலின் உள்ளடக்கம் தொடர்பாக ஒரு சுருக்க விளக்கத்தைத் தந்தார்.

அந்த விளக்கத்தின்படி ஈஸ்டர் தாக்கு தல்களின் பின்னணியில் இந்தியா இருந்தது என்ற குற்றச்சாட்டை உதய கமன்பில மறுப்பதாகக் கூறப்படு கிறது. அந்தத் தாக்குதல்களின் வேர் இஸ்லாமிய அடிப்படை வாதம் தான் என்ற வாதமும் அங்கே முன் வைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

அது ஏற்கனவே இக் கட்டுரையில் கூறப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருக்கும் ஒரு பிரச்சினையைத் தான் வெளியில் இருப்பவர்கள் கையாளலாம். இக்கட்டுரையின் மையப் பொருளும் அதுதான். இஸ்லாமிய அடிப்படை வாதத்தை உற்பத்தி செய்யக்கூடிய ஓர் இன.மத சூழல் நாட்டில் ஏற்கனவே இருந்தது என்பது தான். இப்பொழு தும் அது இல்லை என்று கூறலாமா? இல்லையென்றால் ஏன் ஈஸ்டர் பெரு நாளை முன்னிட்டு தேவாலயங்களுக்கு முன் ஆயுதம் தரித்த படையினரும் போலீசாரும் நிறுத்தப்படுகிறார்கள்? அப்படிப்பட்ட தாக்குதல்களை எதிர் பார்த்துத் தான் அரசாங்கம் பயங்கர வாதத் தடைச் சட்டத்தைப் புதுப்பிக்க முற்படுகிறதா?

இக்கட்டுரை ஈஸ்டர் குண்டு வெடிப்பு வெடிப்பை திட்டமிட்டவர்களின் மத அடிப்படை வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனைய மதத்தவர் களை கொல்வதன் மூலம் தன்னுடைய மத நம்பிக்கைகளை மகிமைப்படுத்த முடியும் என்று கருதும் புனிதப் போர்களை இக்கட்டுரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் தனது இறை நம்பிக்கையின் பெயரால் தனது உயிரைக் கொடுக்கச் சித்தமாக இருப் பது என்பது சாதாரணமானது அல்ல. இப்பொழுது நடந்து கொண்டிருக் கும் மேற்காசியப் போரில் அமெரிக்க இஸ்ரேலிய தொழில்நுட்பங்கள் வெற்றி கொள்ள முடியாமல் இருக்கும் இடம் அதுதான்.

எனவே ஈஸ்டர் குண்டு வெடிப்புகளு க்கான மூல காரணம் ஏற்கனவே நாட்டுக்குள் இருந்தது. கடந்த பல தசாப்த காலமாக குறிப்பாக, 2009க்குப் பின் முஸ்லிம்கள் மீதும் முஸ்லிம் களின் சொத்துக்கள் மீதும் தொடர்ச்சி யாக முன்னெடுக்கப்பட்ட திட்டமிட்ட தாக்குதல்களின் விளைவு அது. இது முதலாவது காரணம்.

இரண்டாவது காரணம், உலகம் முழு வதிலுமான இஸ்லாமிய அடிப்படை வாதத்தின் எழுச்சி.அது இலங்கைத் தீவிலும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தி யது. எனவே ஈஸ்டர் குண்டு வெடிப்பு க்கு உள்நாட்டுப் பரிமாணமும் உண்டு. அனைத்துலகப் பரிமாணமும் உண்டு.

அந்த உள்நாட்டுப் பரிமாணம் முழு மையாக நீக்கப்பட்டு விட்டதா? அது நீக்கப்படவில்லை என்ற பயத்தால் தான் (17ம் பக்கம் பார்க்க)

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியைத் தேடி......

கட்டுரையாளர்:
- அழகு.குணசீலன் -



உலகம் உயிர்த்த ஞாயிறு தினத்தை கொண்டாடிக் கொண்டிருந்தபோது அந்த அனர்த்தம் நடந்தது. இன்னும் சில தினங்களில் ஏழு ஆண்டுகளாகிறது. ஏழாவது ஈஸ்டர் ஞாயிறு மீண்டும் ஏப்ரல் 5இல். ஈஸ்டர் பயங்கரவாத தற்கொலை தாக்குதல் சூத்திரதாரியை நீதியின் முன் நிறுத்துவோம் என்று ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சரும், முப்படைகளின் தளபதியுமான அநுரகுமார திசாநாயக்க பேராயர் மல்கம் ரஞ்சித்துக்கு கடந்த ஆண்டு ஈஸ்டர் காலத்தில் 21, ஏப்ரல் 2025 திகதியிட்டிருந்த காலக்கெடுவுக்கும் வயது ஒன்றாகிறது. அங்கொன்றும், இங்கொன்றுமாக சில கைதுகள் இடம் பெற்ற போதும் உருப்படியாக எதுவும் நடக்கவில்லை.

இந்த சூழலில் முன்னாள் புலனாய்வுத்துறை தலைவர் சுரேஷ் சாலி திடீரென கைது செய்யப்பட்டார். அந்த கைது நடவடிக்கையில் இருந்தும் இதுவரை புதிதாக எதுவும் வெளிச்சத்திற்கு வரவில்லை. இந்த புள்ளியியல் பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர், முன்னாள் அமைச்சர், சட்டத்தரணி உதய கம்மன்பில ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியை வெளிக் கொணரப் போகிறேன் என்று எழுதிய பாஸ்கு பிரஹரயே மஹா மோல கரு சோயா யேம என்ற சிங்கள மொழி மூலமான நூலை 31.மார்ச் 2026 இல் வெளிடப்போவதாத திகதி குறித்து அதே நாளில் வெளியீடு நடந்து முடிந்துள்ளது.

ஜே.வி.பி - என்.பி.பி. அரசாங்கத்தின் அமைச்சரவை அமைச்சர் ஒருவர் வெள்ளிக்கிழமை அச்சுறுத்தல் பாணியில் பயங் காட்டிய போதும் நூல் வெளியீடு திட்டமிட்டபடி நடந்து முடிந்துள்ளது. வெள்ளிக்கிழமை அச்சுறுத்தல் என்பது அரசாங்கத்தின் புலனாய்வுத்துறை வெள்ளிக்கிழமைகளில் சந்தேகநபர்களை கைது செய்து - விசாரணைக்கு அழைத்து, நீதிமன்ற விடுமுறை வார இறுதி.: விடுமுறை காலத்தில் தடுத்து வைத்தல். இந்த ஆட்சியில் பல வெள்ளிக்கிழமைகளை இலங்கை கண்டிருக்கிறது.

இந்த நூல் குறித்த த ஐலண்ட் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் சில முக்கிய விடயங்களை கோடிட்டுக்காட்டியுள்ளது.

(1). ஒவ்வொருவரும் தங்களுக்கு சார்பாக விசாரணைகளை வழி நடத்தினர்.

(2). இது விடயத்தில் புலனாய்வுத்துறை அரசியல் அழுத்தங்கள் அற்று செயற்படவேண்டும்.

(3). சகல தரப்பு கண்ணோட்டங்களும் கண்டறியப்பட வேண்டும்.

(4). கம்பன்பில தனது நூலில் குறிப்பிட்டுள்ள வாதப்பிரதிவாதங்கள் முக்கியமானவை — நோக்கப்பட வேண்டியவை.

(5) இந்தப் புத்தகம் சதி, புதிய விசாரணையை கேள்விக்கு உட்படுத்தல், அதன் நேர்மைத்தன்மை என்பன மீதான ஒரு விசாரணையை ஊக்குவிக்கிறது.

உதய கம்மன்பில இலங்கையில் நன்கு அறியப்பட்ட சிங்கள, பௌத்த பேரினவாத அரசியல்வாதிகளுள் ஒருவர். பொதுவாக சிறுபான்மை தேசிய இனங்களுக்கு வெளிப்படையாக எதிரானவர். அதுவல்ல இங்கு முக்கியம். மாறாக ஒரு சட்டவியலாளராக கடந்த கால புலனாய்வுத்துறை, பாராளுமன்ற தெரிவுக்குழு, ஜனாதிபதி ஆணைக்குழு, அமெரிக்க எப்.பி.ஏ. அறிக்கை மற்றும் இன்றைய விசாரணைகளின் போக்கில் கம்பன்பில எழுப்பும் வாதப் பிரதிவாதங்கள், அவரின் அரசியல் நிலைப்பாட்டிற்கு அப்பாலும், அவர் மீதான விமர்சனங்களுக்கு அப்பாலும் முக்கியமானவை. இதனால் பத்தோடு பதினொன்றாக முற்றாக தட்டிக் கழிக்காது நோக்கப்படவேண்டிய தேவையுள்ளது.

## சதியின் பிறப்பிடம்

அன்றைய ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவிடம் இருந்து தனக்கு பணி நீடிப்பு கிடைக்காததால், ஈஸ்டர் தாக்குதல்களுக்கு பின்னால் ஒரு சதி இருப்பதாக கூறி முன்னாள் சட்டமா அதிபர் டப்புல டீ விவேரா ஒரு பரபரப்பை ஏற்படுத்தினார் என்று கம்மன்பில பதிவிடுகிறார்.

அது மட்டுமன்றி, சதி எனக்கூறிய சட்டமா அதிபர் அது பற்றிய விசாரணைக்கு புலனாய்வாளர்களுடன் ஒத்துழைக்கவில்லை என்றும், இதன் மூலம் அந்தச் 'சதி' யை ஆதாரத்துடன் நிரூபிக்க தவறினார் என்றும் நூலாசிரியர் அவரை நோக்கி சுட்டுவிரலை நீட்டுகிறார்.

## அல்விஸ் குழ அறிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்காவினால் நியமிக்கப்பட்ட அல்விஸ் குழுவின் அறிக்கையை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கிடப்பில் போட்டதாக கம்மன்பில கூறுகிறார். தாக்குதல் நடந்த போது பொறுப்பில் இருந்த முன்னாள் சிரேஷ்ட பிரதி புலனாய்வாளர் ரவி செனவிரத்தினவை, அந்த தாக்குதல்களுக்கு வழி வகுத்த புலனாய்வு குறைபாடுகளுக்காக அல்விஸ் குழு அறிக்கை குற்றம் சாட்டியுள்ளது. அவ்வாறான ஓய்வில் இருந்த ஒருவரை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மீண்டும் பணிக்கு அழைத்து, செனவிரத்ன பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக்கப்பட்டார் என்பது கம்மன்பிலவின் மற்றோரு குறைப் பிடிப்பு.

ஷானி அமரசேகர அடிப்படை உரிமைகள் வழக்கு ஒன்றில் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் ஒரு உண்மையை மறைத்ததாக கம்மன்பில கூறுகிறார். மறைக்கப்பட்ட அந்த உண்மை என்ன...?

2018 நவம்பரில் மட்டக்களப்பு மேற்கு வவுணதீவில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்ட சம்பவத்தில் சஹ்ரான் ஹாஷிமின் பயங்கரவாதக்குழுவான தேசிய தவ்ஹீத் ஜமாத்தின் (NTJ) தொடர்பு குறித்து இராணுவ புலனாய்வுத்துறை ஒரு விரிவான அறிக்கையை ஈஸ்டர் தாக்குதலுக்கு ஒன்பது நாட்களுக்கு முன்பு சி.ஐ.டி.க்கு அனுப்பியிருந்தது என்றும், சஹ்ரானின் சகோதரர் ரிஸ்வான் மற்றும், ஆர்மி முகமது ஆகியோரிடம் விசாரணைகள் மேற்கொள்வதன் மூலம் கூடுதல் தகவல்களை பெற முடியும் என அந்த அறிக்கை கூறுகிறது என்கிறார் கம்மன்பில.

சஹ்ரானின் பயங்கரவாத செயற்பாடுகள் குறித்து நம்பகமான தகவல்கள் கிடைத்திருந்த போதிலும், அந்த படுகொலையை தடுக்கத்தவறிய தனது தோல்வியை மூடி மறைப்பதற்காகவே ஷானி அமரசேகர இந்த உண்மையை பிரமாணப் பத்திரத்தில் மறைத்தார் என்று கம்மன்பில வாதிடுகிறார்.

இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள், மற்றும் சஹ்ரானின் பயங்கரவாத செயற்பாடுகள் குறித்து உளவு அமைப்புகள் 337 அறிக்கைகளை காவல்துறைக்கு வழங்கியுள்ளன என்று ஒரு விசாரணை ஆணைக்குழு அறிக்கையை மேற்கோள் காட்டுகிறார் ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியைத் தேடுதல் நூலின் ஆசிரியர்.

## செத்தும் சாகாத சாரா

சாரா காணாமல் போனதாக கூறப்படுவது, அவள் இந்தியாவின் றோ அமைப்புடன் தொடர்பு கொண்டு இருந்ததால், இந்தியாவுக்கு தப்பிச் சென்றாள் என்ற சதிக்கோட்பாட்டை வலுப்படுத்த ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது என்று கம்மன்பில வாதிடுகிறார். இந்தக் கதையை எதிர்க்கட்சியில் இருந்த போது இன்றைய ஜே.வி.பி.அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸவே பரப்பினார் என்பது கம்மன்பிலவின் கருத்து.

அப்போதைய உயர் புலனாய்வு அதிகாரி மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, சாய்ந்தமருதுவில் கொல்லப்பட்ட வேது ஆர்வலர்களில் சாராவும் ஒருவர் என்று உலகை நம்ப வைக்க, சாலேயின் வேண்டுகோளில் ஒரு புதிய டி.என்.ஏ பரிசோதனையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடாத்தினார் என சில அரசியல்வாதிகள் குற்றம் சாட்டி உள்ளனர்.

முதல் இரண்டு சோதனைகளில் சாராவின் தாயிடம் இருந்து பெறப்பட்ட டிஎன்ஏ மாதிரிகள் கொல்லப்பட்டவர்களின் டிஎன்ஏ மாதிரியுடன் பொருந்தவில்லை.

சாய்ந்தமருது குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் உடல்களை தடயவியல் ரீதியாக மறுசீரமைப்பதானது மிகவும் கடினமாக இருந்ததால், சம்பவ இடத்தில் சேகரிக்கப்பட்ட (21ம் பக்கம் பார்க்க)

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியைத் தேடி....

(20ம் பக்கத் தொடர்ச்சி) உடல் பாகங்கள் ஒரு சாக்கில் கட்டி புதைக்கப்பட்டன என்றும் அந்த உடல்களில் மூன்றாவது டிஎன்ஏ பரிசோதனை செய்யப்பட்டதே வேறுபட்ட சோதனை முடிவுகளுக்கு காரணம் என்றும் கம்மன்பில விவகாரத்தை தனது நூலில் வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறார்.

## அஸாத்மௌலானா / சனல் 4

ஈஸ்டர் படுகொலைகளுக்கு புலனாய்வு பிரிவை பொறுப்பாக்கும் அஸாத் மௌலானா, ஒரு வளர்சியடைந்த நாட்டின் அரசியல் தஞ்சம் கோரும் சட்டத்தை மீறுபவர் என்று குறிப்பிடுகிறார். மௌலானாவுக்கு வேறு அமைப்புடன் தொடர்புகள் இருந்ததாகவும், கிழக்கில் நடந்த ஒரு பரீட் சார்த்த குண்டு வெடிப்பில் காயமடைந்த சஹ்ரானின் சகோதரர் ரிஸ்வானுக்கு சிகிச்சை பெற அவர் உதவியாகவும் உதயன் கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

பெப்ரவரி 2018 இல் சாலே சஹ்ரானைச் சந்தித்ததாக மௌலானா கூறும் வீடு ஆகஸ்ட் – செப்டம்பர் 2018 தான் கட்டப்பட்டது என்பதும் கம்மன்பிலவின் வாதங்களில் ஒன்று.

சுரேஸ் சாலே டிசம்பர் 2016 முதல் டிசம்பர் 2019 வரை வெளிநாட்டில் இருந்தார். தாஜ் ஹோட்டலில் தன்னைத் தானே வெடிக்கச் செய்ய தவறிய NTJ குண்டுதாரி தாக்குதல்களுக்கு முன்பு சஹ்ரான் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி தானாகவே தெஹிவளைக்கு சென்றார். எனவே தாஜ் ஹோட்டலில் இருந்த ஒருவருக்கு போக்குவரத்து வசதி செய்து கொடுக்க இராணுவப் புலனாய்வு பிரிவு தனது உதவியை நாடியதாக அஸாத்மௌலானா கூறும் கூற்றை கம்மன்பில நிராகரிக்கிறார்.

தாஜ் ஹோட்டலில் வெடிக்காத குண்டு சம்பந்தமாக, குண்டு வெடிப்பு நடப்பதற்கு சில கணங்களுக்கு முன்பு தான் ஹோட்டல் விருந்தினர்களின் பெயர்ப் பட்டியல் உளவுத்துறைக்கு அனுப்பப்பட்டது. மேலும் குண்டுதாரியான ஜமீல் முகமது ஹோட்டலில் பதிவு செய்வதற்கு தன் தந்தையின் பெயரேயே பயன்படுத்தி இருந்தார். எனவே அந்த பட்டியல் முன்னதாக அனுப்பப்பட்டு இருந்தாலும் கூட, யாராலும் அவரைக் கண்டு பிடித்திருக்க முடியாது என்று அந்த நூலில் அவர் குறிப்பிடுகிறார்.

## குண்டுதாரிக்கு வந்த தொலைபேசி அழைப்புக்கள்

உளவுத்துறை அதிகாரியாக பணியாற்றிய ஒய்வு பெற்ற எஸ்.எஸ்.பி. ஒருவர் எச்சரித்த பின்னரே இராணுவ உளவுத்துறை அதிகாரிகள் ஜமீல் முகமதுவைத் தொடர்பு கொள்ள முயன்றனர்.

தன் கணவரிடம் இருந்து ஒரு குரல் செய்தியை பெற்ற பிறகும், அவரைத் தொடர்பு கொள்ள முடியாமல் பீதியடைந்த ஜமீலின் மனைவி, ஜமீல் தாஜ் ஹோட்டலில் இருந்த போதே அவரது எண்ணுக்கு தொடர்ந்தும் அழைத்துக் கொண்டிருந்தார். ஹோட்டல் சிசிடிவி காட்சிகளில் காணப்பட்டபடி பதிலளிக்கப்படாத அந்த அழைப்புக்கள் அனைத்தும் ஜமீலின் மனைவியிடமிருந்து வந்தவையே தவிர இராணுவ உளவுத் துறையிடம் இருந்து அல்ல.

பின்னர் ஜமீலின் மனைவி ஜமீலின் சகோதரரைத் தொடர்பு கொண்டார். சகோதரர் மேற்குறிப்பிட்ட



எஸ்.எஸ்.பி.யின் உதவியை நாடினார். அதற்குள் குண்டுகள் வெடித்திருந்தன. நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த முன்னாள் எஸ்.எஸ்.பி. உளவுத் துறைக்கு தகவல் தெரிவித்தார்.

தாஜ் ஹோட்டலில் இருந்து தெஹிவளையில் உள்ள ஒரு மசூதிக்கு சென்ற ஜமீல் அங்கிருந்த ஒரு பாதுகாப்பு ஊழியரின் தொலைபேசியை பயன்படுத்தி தனது மனைவியுடன் தொடர்பு கொண்டார். அதற்கிடையில் உளவுத்துறை அதிகாரிகள் அவரது வீட்டிற்கு விரைந்து சென்று அவரது மனைவியின் தொலைபேசியை பயன்படுத்தி அந்த ஆள் அடையாளம் தெரியாத எண்ணுக்கு அழைத்து பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் பேசி ஜமீலை அங்கிருந்து செல்ல விடவேண்டாம் என்று கேட்டுக் கொண்டனர். அதற்குள் அங்கிருந்து கிளம்பி விட்ட ஜமீல், அப்பகுதியில் உள்ள விருந்தினர் இல்லத்தில் தன்னைத் தானே வெடிக்கச்செய்து கொண்டார்.... என்று உதய கம்மன்பிலவின் நூல் ஒரு பயங்கர மர்ம நாவலாக தொடர்கிறது.

சஹ்ரான் இலங்கையின் ஐ.எஸ்.தலைவராக இருந்தார். அவரே ஈஸ்டர் தாக்குதல்களை திட்டமிட்டு நடாத்தினார். தற்கொலை தாக்குதல்களை நடாத்திய வங்கதேச ஐ.எஸ்.தலைவரிடம் இருந்து உத்வேகம் பெற்ற சஹ்ரான் உயிருடன் பிடிபட விரும்பாததால் தன்னைத் தானே வெடிக்கச் செய்து கொண்டார், என்று ஈஸ்டர் தாக்குதல்களின் சூத்திரதாரியாக சஹ்ரானை கம்மன்பில அடையாளம் காட்டுகிறார்.

சதிக்கோட்பாடுகளை கட்டமைப்பதற்கும், உளவு அமைப்புக்களுக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கும் பயன்படுத்தப்பட்ட சில முக்கிய பிரச்சினைகள் குறித்து இப்புத்தகம் புதிய கண்ணோட்டத்தை வழங்குகிறது. இது நிச்சயம் விவாதத்தை தூண்டும். நாலாசிரியருக்கு எதிராக பழிவாங்கும் வேட்டை நடக்காது என்று மட்டுமே நம்பமுடியும் என்ற த ஐலண்ட்'' இன் நம்பிக்கையும், கருத்துருவாக்கமும் புதிய தேடல்களை நோக்கி அநுர அரசாங்கத்தை நகர்த்துமா? என்பதற்கான பதில் அவர்களுக்கே வெளிச்சம். – நன்றி: த ஐலண்ட்


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# இஸ்ரேலின் தேசியப் பாதுகாப்பும் இறையாண்மையும்

சர்வதேச அரசியலில் ஒரு தேசத்தின் இறையாண்மை என்பது அதன் எல்லைகளைப் பாதுகாப்பதிலும், தனது குடிமக்களுக்கு எதிரான அச்சுறுத்தல்களை முன்கூட்டியே கண்டறிந்து முறியடிப்பதிலும் தங்கியுள்ளது.

மத்திய கிழக்கின் புவிசார் அரசியலில் இஸ்ரேல் எதிர்நோக்கும் சவால்கள்



ஏனைய நாடுகளை விடவும் தனித்துவமானவை. குறிப்பாக, ஈரானுடனான தற்போதைய மோதல் என்பது வெறும் நிலப்பரப்பு சார்ந்தது மட்டுமல்ல. அதுவொரு தேசத்தின் இருப்பு (Existential threat) சார்ந்த போராட்டமாகும்.

வரலாற்று ரீதியாக அண்டை நாடுகளுடன் போரிட்டு அமைதியை நிலைநாட்டிய அனுபவங்களைக் கொண்ட இஸ்ரேல், இன்றையச் சூழலில் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த முன்னெடுக்கும் நடவடிக்கைகள் சர்வதேச அரசியல் கொள்கைகளின்படி எவ்வாறு அமைகின்றன என்பதை ஆராய்வது அவசியமானது.

இஸ்ரேலின் பாதுகாப்புச் சிந்தனையில் ஈரானின் நிலைப்பாடு எப்போதுமே கவலைக்குரிய காரணியாகவே இருந்து வந்துள்ளது. ஈரானின் முன்னாள் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனியின் பகிரங்கமான எச்சரிக்கைகள், 'இஸ்ரேல் இன்னும் 25 ஆண்டுகளில் அழியும்' மற்றும் 'சியோனிச ஆட்சி அழிக்கப்பட வேண்டும்' போன்ற வாசகங்கள் வெறும் அரசியல் முழக்கங்களாக மட்டும் இஸ்ரேலால் பார்க்கப்படவில்லை. மாறாக, இவை தனது நாட்டின் இராணுவக் கொள்கைக்கு விடுக்கப்படும் சவால்களாகவே கருதப்படுகின்றன.

இஸ்ரேலின் இறையாண்மைக்கு விடுக்கப்படும் இந்த அச்சுறுத்தல் மூன்று நிலைகளில் வெளிப்படுகிறது அதில் நேரடி அச்சுறுத்தல்: ஈரானின் பாரிய ஏவுகணை அபிவிருத்தி மற்றும் அணு ஆயுதக் கனவாகம். இரண்டாவது, நிழல் யுத்தம் அதாவது, இஸ்ரேலின் எல்லைகளில் நிலைகொண்டுள்ள ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் போன்ற அமைப்புகளுக்கு ஈரான் வழங்கும் தொடர்ச்சியான ஆதரவாகும். மூன்றாவதாக மத்திய கிழக்கில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்ட ஈரான் எடுக்கும் முயற்சிகள் புவி சார்ந்த அழுத்தங்களை ஏற்படுத்துகின்றன.

2015ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட ஈரானிய அணுசக்தி ஒப்பந்தம் ஒரு தற்காலிகத் தீர்வாகத் தெரிந்தாலும், அதிலிருந்து அமெரிக்கா விலகிய பின்னர் ஈரான் மேற்கொண்ட நடவடிக்கைகள் இஸ்ரேலின் அச்சத்தை உறுதிப்படுத்தின. 450 கிலோ கிராம் யுரேனியத்தை ஆபத்தான நிலைக்குச் செறிவுட்டியது, ஈரானை அணு ஆயுத நாடாக மாற்றும் விளிம்பிற்குத் தள்ளியது. இந்தச் சூழலில், தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த இராணுவ ரீதியான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது இஸ்ரேலின் இறையாண்மை சார்ந்த உரிமையாக பார்க்கப்படுவதை நிராகரிக்க முடியாது.

இஸ்ரேலின் வரலாற்றை உற்று நோக்கினால், அமைதி என்பது எப்போதும் போர்க்களத்தின் களைப்பிலிருந்தே பிறந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். 1948இல் இஸ்ரேல் உருவான போது, அதன் மிகப்பெரிய அச்சுறுத்தலாக எகிப்து விளங்கியது. அன்றைய எகிப்திய ஜனாதிபதி நாசரின் சொல்லாடல்கள் தற்போதைய ஈரானியத் தலைவர்களின் பேச்சுகளைப் போலவே கடுமையானவையாக இருந்தன. 'இஸ்ரேல் ஒரு செயற்கையான நாடு, அது மறைந்து விட வேண்டும் என்று அவர் முழங்கினார்.

இருப்பினும் முப்பது ஆண்டு கால மோதல்கள் மற்றும் பல போர்களுக்குப் பிறகு, 1977 இல் அன்வர் சதாத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஜெருசலேம் விஜயம் அமைதிக்கான பாதையைத் திறந்து விட்டது. 1994இல் ஜோர்தானுடனான அமைதி ஒப்பந்தம் மற்றும் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஜேர்மனி பிரான்ஸ் இடையிலான உறவு மாற்றம் போன்றவை, பரம எதிரிகளும் காலப்போக்கில் பங்காளிகளாக முடியும் என்பதற்குச் சான்றுகளாகும்.

ஆனால், இந்த அமைதி ஒப்பந்தங்கள் அனைத்தும் இரு தரப்பும் போரினால் பொருளாதார மற்றும் இராணுவ ரீதியாகப் பலவீனமடைந்த பின்னரே சாத்தியமாகின. தற்போதைய ஈரான் – இஸ்ரேல் யுத்தமும் அத்தகையதொரு 'போர்க்கள களைப்பை' நோக்கி இரு நாடுகளையும் தள்ளிக் கொண்டிருக்கிறது.

ஒரு தேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகள் அந்த நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தற்போதைய போரினால் ஈரான் சந்தித்திருக்கும் பொருளாதாரச் சரிவு முன்னெப்போதும் இல்லாதது. 2026 ஆம் ஆண்டில் ஈரானின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 10சதவீதம் வரை சுருங்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 40 சதவீதத்திற்கும் அதிகமான பணவீக்கம், உணவுப் பொருட்களின் விலை நூறு சதவீதத்திற்கும் மேல் உயர்வு, மற்றும் 10 மில்லியன் ரியால் பணத்தாள்களை அச்சிடும் அளவிற்கு வீழ்ச்சியடைந்த நாணய மதிப்பு என்பன ஈரானை பொருளாதார அனர்த்த நிலைக்குத் தள்ளியுள்ளன. இஸ்பஹான் மற்றும் குசெஸ்தான் போன்ற தொழில்முறை மையங்கள் மீதான தாக்குதல்கள் அந்நாட்டின் முதுகெலும்பைத் தகர்த்துள்ளன.

இஸ்ரேலின் பொருளாதாரமும் அழுத்தங்களைச் சந்தித்து வருகிறது. 2026 ஆம் ஆண்டிற்கான வரவு,செலவுத் திட்டம் பாதுகாப்புச் செலவுகளுக்காக மேலதிகமாக 32 பில்லியன் ஷெக்கல்களைக் கோருகிறது. நாட்டின் கடன் சுமை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 70 சதவீதமாக உயரும் அபாயம் உள்ளது.

சுற்றுலா, சில்லறை வணிகம் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இஸ்ரேல் உயர் வருமான நாடாக இருப்பதால், இந்த நெருக்கடியைத் தாங்கும் வலுவை இன்னும் தக்க வைத்துள்ளது.

மறைந்த பொருளாதார நிபுணர் ஸ்டான்லி பிஷர் குறிப்பிட்டது போல, அமைதி நிலவும் சூழலில் இஸ்ரேலால் 7சதவீத வளர்ச்சியை எட்ட முடியும். ஆனால் அந்தப் பொருளாதார வளர்ச்சியை விடவும் நாட்டின் பாதுகாப்பே முதன்மையானது என்பதில் இஸ்ரேலிய அரசு உறுதியாக உள்ளது என்பது மிகவும் முக்கியமானது. ஏனெனில் தேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் தான் சுபீட்சமான எதிர்காலம் தங்கியுள்ளது.

அதே நேரம் போர் என்பது எப்போதும் ஒரு தீர்வாக இருக்க முடியாது என்பதை இஸ்ரேல் உணர்ந்தே இருக்கிறது. 2002ஆம் ஆண்டு அரபு லீக் முன்வைத்த 'அரபு அமைதி முயற்சி' இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். ஈரான் அந்த அமைப்பில் உறுப்பினராக இல்லா விட்டாலும், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பினராக அதை ஏற்றுக்கொண்டிருந்தது. இஸ்ரேல் ஒரு பலமான நிலையில் இருந்து கொண்டு இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதையே விரும்புகிறது.

தற்போதைய போர் ஈரானின் ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்துமா அல்லது அதன் அணு ஆயுதத் திட்டத்தை முழுமையாக முடக்குமா என்பது கேள்விக்குறியாக இருந்தாலும், இஸ்ரேலின் இந்த நடவடிக்கைகள் ஈரானை சர்வதேச அளவில் தனிமைப்படுத்தியுள்ளன. அரபு நாடுகளுடனான இஸ்ரேலின் உறவு மேம்பட்டு வரும் சூழலில், ஈரானின் ஆதிக்கம் குறையத் தொடங்கியுள்ளது. இது பிராந்தியத்தில் புதிய அதிகாரச்சமநிலையை உருவாக்கும்.

அந்த வகையில், இஸ்ரேலின் தற்போதைய இராணுவ நடவடிக்கைகள்



என்பது வெறும் நிலப்பரப்பை விரிவுபடுத்தும் நோக்கம் கொண்டவை அல்ல. மாறாக, அவை தனது இறையாண்மையைப் பாதுகாப்பதற்கானவொரு கவசமாகும். நாடொன்று தனது அழிவை நோக்கமாகக் கொண்ட சக்திகள் எல்லையில் வளர்வதை வேடிக்கை பார்க்க முடியாது என்ற சர்வதேச அரசியல் தர்மத்தின் அடிப்படையிலேயே இஸ்ரேலின் செயற்பாடுகள் அமைகின்றன.

வரலாறு காட்டியுள்ளபடி, எகிப்து மற்றும் ஜோர்தானுடன் ஏற்பட்ட அமைதியைப் போன்றதொரு நிலை ஈரானுடனும் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால், அந்த அமைதி நிலைக்குச் செல்வதற்கு முன்னதாக, தனது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதில் இஸ்ரேல் சமரசம் செய்து கொள்ளாது.

போரை இஸ்ரேல் கடைசித் தெரிவாக மாற்ற வேண்டுமாயின் அதற்கு வலுவான இராணுவத் தற்காப்பு அரண் அவசியமாகிறது. இஸ்ரேல் மற்றும் ஈரானிய மக்களின் கைகளில் உள்ள இந்த எதிர்காலம், அழிவிலிருந்து மீண்டு வளர்ச்சியை நோக்கியதாக மாற வேண்டும் என்பதே நடுநிலையாளர்களின் எதிர்பார்ப்பாகும். ஆனால் அந்தப் புரிதல் தற்காலிகப் போர் நிறுத்தத்தை எதிர்க்கும் ஈரானிடத்தில் இன்னமும் ஏற்படவில்லை.


VENNILA ENTERTAINERS
பெருமையுடன் வழங்கும்
APRIL
25
SATURDAY@ 5:30PM
The Theatre
at GREAT CANADIAN
TORONTO
1133 Queen's Plate Dr,
Toronto, ON M9W 0G4
(Free Parking)
TRAVEL PARTNER
VMS TRAVEL
Tel: 416.293.5800
NEW PROMOTERS
AUTO CENTRE
T:416.285.8608 / 416.752.9797
THANKS TO
east FM 102.7
TITLE SPONSOR
Effective. Responsive. Caring
HIMPRO
By HIMELFARB PROSZANSKI
POWERED BY
TCS
Top Choice Solutions
"For all your transportation needs"
Get Your Tickets at
ticketmaster.ca
starting from $45
DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC.
T: 416-335-3683
Tisant Rajaratnam
Sales Representative
RE/MAX
THIVANESH
S P CHARAN
CHINNU SENTHAMILAN
SUSANTHICA
SAPESAN
SREEHARI
PAVITRA
Sa Re Ga Ma Pa
2026
SHIVANI
தென்னிந்திய இசைக் கலைஞர்கள்
ROUGE BAKERY
MEDIA PARTNERS
CATERING PARTNER
VENUE PARTNER
GOLD SPONSORS
ஈழநாடு
மகிழ்ச்சி
MAKILCHI
SOUTHERN AROMA
Tel: 416-837-7454
ARYLIA
Productions
LIFT
24/7 TOWING SERVICE
LIFT-Towing & Auto Services
416-473-3855 | 416-879-5267
INSURANCE FOR THE HIGH-NET-WORTH
Prem Arasaratnam
INSURANCE BROKER
BIG
416 845 3000
prem@thebig.ca
NEW PROMOTERS
AUTO CENTRE
Complete Automotive Service & Repairs
773 Warden Ave, Unit 8 Scarborough ON M1L 4C3
T:416.285.8608 / 416.752.9797
GOLD SPONSORS
Platinum
CAR & TRUCK RENTAL
416-613-1811
Netwyn.Place
MT
CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
inter-citi
LOGISTICS
PHOTO FAST WORLDWIDE
SHIPPING CENTRE
416-230-3733
JUDE ANTHONYPILLAI
தொடர்புகளுக்கு: 647-612-4166 | 647-655-9531 | 647-621-7889 | VIP|VVIP 647-594-9573



Secure. Grow. Protect.
Your Future, Your Terms - Protect What Matters
KRISHNA SABARATNAM
Insurance & Investments
I'm here to help! Call now
416-846-2685
Krishna.gsabaratnam@gmail.com
10 Thornmount Drive, Scarborough, ON, M1B 3J4.


# இலங்கையில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்யக் கோரிக்கை

இலங்கையின் சிறைகளில் பல தசாப்தங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று கத்தோலிக்க ஆயர்கள், மதத் தலைவர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் வலுவான கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட இந்த மனுவில், 15 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறை தண்டனை அனுபவித்து வரும் 10 தமிழ் அரசியல் கைதிகளின் விபரங்கள் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இதில் இருவர் சுமார் 30 ஆண்டு காலமாகச் சிறையில் வாடி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த மனுவில் 324 நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் கையெழுத்திட்டுள்ளனர். இதில் இரண்டு கத்தோலிக்க ஆயர்கள், 29 கத்தோலிக்க மதகுருமார்கள், ஏழு கன்னியாஸ்திரிகள் மற்றும் இரண்டு பௌத்த துறவிகள் உள்ளடங்குகின்றனர். நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தக் கைதிகளில் பெரும்பாலானோர், 2009ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த தருணத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவர்களில் பலருக்கு இதுவரை முறையான விசாரணைகளோ அல்லது தீர்ப்புகளோ வழங்கப்படவில்லை என்பது மனித உரிமை ரீதியாகப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் நல்லிணக்கத்தை நோக்கி நகர்வதற்கு இக்கைதிகளின் விடுதலை ஒரு மிக முக்கியமான ஆரம்பப்புள்ளியாக அமையும் என மனுதாரர்கள் வாதிடுகின்றனர். கடந்த கால வரலாற்றைச் சான்றாகக் காட்டி, 1977ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன, அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்ற மார்க்சிச கிளர்ச்சிக் குழுவான ஜனதா விமுக்தி பெரமுன உறுப்பினர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ததை அவர்கள் நினைவு கூர்ந்துள்ளனர்.



தற்போதைய தேசிய மக்கள் சக்தி (ே) அரசாங்கம், ஜே.வி.பி-யின் பின்னணியைக் கொண்டிருப்பதாலும், அரசின் அடக்கு முறைகளைத் தாங்களாகவே அனுபவித்திருப்பதாலும், தமிழ் அரசியல் கைதிகளின் வலியை உணர்ந்து அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயகக் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும், கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என்றும் உறுதியளித்திருந்தார். இருப்பினும், தற்போதைய சூழலில் இந்த வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என மனித உரிமை ஆர்வலர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். பிரபல மனித உரிமை ஆர்வலர் ருக்கி பெர்னாண்டோ இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், புதிய

(18ம் பக்கம் பார்க்க)

# லெபனானையும் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இணைக்குமாறு கனடா அழுத்தம்!



அமெரிக்காவின் டிரம்ப் நிர்வாகத்திற்கும் ஈரானுக்கும் இடையே எட்டப்பட்டுள்ள தற்காலிகப் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் லெபனானையும் ஒரு அங்கமாகச் சேர்க்க வேண்டும் என்று கனடா அரசு தீவிரமாக வலியுறுத்தி வருகிறது. இந்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் மதிக்க வேண்டும் எனவும், லெபனான் மீதான தாக்குதல்களை நிறுத்த வேண்டும் எனவும் பிரதமர் மார்க் கார்னி தலைமையிலான லிபரல் அரசு அழுத்தம் கொடுத்து வருவதாக கனடிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லெபனானுக்காகக் குரல் கொடுக்கும் பல நாடுகளில் கனடாவும் ஒன்று. இந்த விவகாரம் இறுதியில் அதிபர் டிரம்ப் இஸ்ரேலுக்கு வழங்கும் அனுமதியைப் பொறுத்தே அமையும் என கனேடிய அரசின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈரானுடன் எட்டப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் லெபனான் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதில் இன்னும் குழப்பம் நீடிக்கிறது. ஒப்பந்தத்தை முன்னின்று நடத்திய பாகிஸ்தான் லெபனான் இதில் உட்படும் என்று கூறினாலும், அமெரிக்காவும் இஸ்ரேலும் இதனை மறுத்து வருகின்றன.

போர்நிறுத்தம் என்பது லெபனானையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதே எங்களின் புரிதல் அதுவே களத்தில் யதார்த்தமாக இருக்க வேண்டும் என பிரதமர் மார்க் கார்னி மீண்டும் வலியுறுத்தினார்.

மேலும், ஹெஸ்புல்லா அமைப்பினர் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும், லெபனானின் இறையாண்மையை இஸ்ரேல் மதிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய சமீபத்திய தாக்குதல்களில் 200-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதை அடுத்து, அங்கு ஒரு உள்நாட்டுப் போர் உருவாகும் சூழல் இருப்பதாக கனடா கவலை தெரிவித்துள்ளது.